AL 87 DAY CLASS
(Mon. -- Fri.)
PHYSICS
ஆசிரியர்: திரு. R. சத்தியசீலன்
7-30 -- 8-30
ஒலியியல்
ஆரம்பம்: 10-03-1987
8-30 -- 9 30
சடப்பொருளின் இயல்புகள்
ஆரம்பம்: 05-03-87
New Master
INSTITUTE
B.M C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ 2/-

AL 87
DAY CLASS
(Mon. - Fri)
CHEMISTRY
ஆசிரியர் திரு மகேஸ்
8-30 — 9-30
சேதன இரசாயனம்
9-30 — 10-30
பொது இரசாயனம்
New Master
INSTITUTE
B M.C. Lane, JAFFNA.

மலர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மாசி மீ 16 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 29 (28-02-1987) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 6

● இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவ

# சர்வதேச அமைப்புகளை அனுமதிக்க வற்புறுத்து

## சமாதான நிறுவனம் அறிக்கை

ஒஸ்லோ, பெப்ரவரி 28

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவதற்காக ஐ. நா. அவதானிகள் குழு, பொதுநலவாய அமைப்புக்குழு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றை இலங்கை அரசு நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு சர்வதேசச் சமாதான ஆராய்ச்சி நிறுவனம் இலங்கை இனமோதல் பற்றி தயாரித்துள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தி உள்ளது.

இந்த நிறுவனத்தின் தலைமையலுவலகம் நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் உள்ளது.

சர்வதேச விழிப்பு நிறுவனத்தின் உதவியுடன் பிரஸ்தாப அறிக்கை தயாரிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;-

ஐக்கிய நாடுகள் சபையிலும் பொதுநலவாய அமைப்பிலும் இலங்கை உறுப்பினராக உள்ளது. இவற்றினால் இலங்கை சில உரிமைகளை பெற்றுள்ளது. அதே நேரம் இந்த ஸ்தாபனங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளும் இலங்கைக்கு உண்டு.

1983 இனக் கலவரத்தின் பின்னர் இலங்கை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியை வெளியேற்றி விட்டது. இதனால் அச்சங்கத்தைப் பொறுத்தவரையில் உரிமைகளும் கடமைகளும் இலங்கைக்கு இல்லை.

இருந்தும் ஜெனீவா உடன்படிக்கையின் கீழ் சில கட்டுப்பாடுகளை இலங்கை நிறைவேற்ற வேண்டி உள்ளது.

ஐ. நா.

ஐ. நா. செயலாளர் நாயகத்தின் நல்லெண்ண உதவியைப் பயன்படுத்தி (8 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்மாவட்ட கலாசாரப் பேரவையின் சார்பில் "மனிதமாடு" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இவ்வார முற்பகுதியில் நடைபெற்றது.

'மனிதமாடு' ஆசிரியர் திரு அ செ. முருகானந்தனுக்கு நாதஸ்வரக் கலாநிதி திரு என். கே. பத்மநாதன் பொற்கிழி வழங்குவதைப் படத்தில் காணலாம்

இலக்கிய உபகுழு உறுப்பினர்கள் திரு. டொமினிக் ஜீவா, திரு. சிற்பி, பேரவை செயலாளர் திரு ச. பொ பரலசிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## யாழ் தபாலகத்தினுள் குண்டு வெடித்தது

### ஊழியர் ஒருவர் பலியானார்

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ் தபாலகத்தினுள் குண்டு ஒன்று வெடித்தபோது தபாலக ஊழியர் ஒருவர் பலியானார்.

மற்றும் ஒருவர் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்

நேற்றுப் பகல் 11 மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கோட்டை முகாமுக்கு முன்பாக உள்ள யாழ் பெரிய தபால் கந்தோரில் உள்ள தஸ்தாவேஜுக்களை எடுப்பதற்கென ஊழியர்கள் சிலர் நேற்றுக் காலை தபால் கந்தோருக் (8 ஆம் பக்கம் பார்க்க)

## தோட்ட வெளியில் தனித்து நின்ற இளைஞன்மீது ஹெலி தாக்குதல்

நிலமட்டத்துக்குத் தாழப் பறந்து வந்த ஹெலி தோட்டவெளியில் தனித்துநின்ற இளைஞன்மீது துப்பாக்கிச் சன்னங்களைப் பொழிந்தது

இச்சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் அச்சுவேலி இழக்குப்பகுதியில் உள்ள கொள்ளுப்பிட்டி தாவில் என்ற இடத்தில் நடைபெற்றது.

கதிரவேலு தெய்வலிங்கம் என்னும் 24 வயது இளைஞனே ஹெலித்தாக்குதலுக்கு உள்ளானார்.

இவர் தமதுதோட்டத்தில் இருந்து வீடுநோக்கி வந்துகொண்டிருந்தார்.

இவரைக்கண்ட ஹெலி நிலமட்டத்திற்குத்தாழப் பறந்து தனித்து நின்ற இவர்மீது துப்பாக்கிச் சன்னங்களைப் பொழிந்தது.

இதனால் இவர் கை, கால், இடுப்பு, வயிற்றுப் பகுதிகளில் குண்டுகள் துளைத்த நிலையில் அச்சுவேலி தனிகம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

(இ-11)

## நிலாவரையிலிருந்து யாழ் மாநகரசபைப் பகுதிக்குக் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், பெப். 28

நிலாவரைக் கிணற்றில் இருந்து யாழ்-மாநகரசபைப் பகுதி யாழ் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் யாழ்-மாநகரசபையில் பதிவு செய்யப்பட்டு குடிதண்ணீர் வழங்கப்படாதிருக்கும் 750 பேருக்கு இவ்வருடம் குடிதண்ணீர் வழங்கப்பட்டுவிடும்.

நேற்று நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி கே சிவஞானம் இதனைத் தெரிவித்தார்.

சுமார் ஐம்பது லட்சம் ரூபா செலவில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

திட்டத்தின் மூலம் யாழ் மாநகரசபைப் பகுதியில் உள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணப்பட்டுவிடும்.

இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முதல்கட்ட வேலையாக நீர்ப்பரிசோதனை யாழ் பல்கலைக்கழக இரசாயனப் பிரிவு மேற்கொண்டதன்பின் உலக சுகாதாரத் தாபனம் இதனை நந்நீராக ஏற்றுக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இந்த வருடத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பளிக்கவும் வாய்ப்பு ஏற்படும் என ஆணையாளர் தெரிவித்தார். (இ-10)

## சுங்கத் திணைக்கள அதிகாரி சுட்டுக் கொலை!

கொழும்பு, பெப். 28

கொழும்பு சுங்கத் திணைக்களத்தின் பிரதம புலனாய்வு அதிகாரி திரு. டபிள்யு. டி. அமரபால நேற்றுக் காலை இனந்தெரியாத நபர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டார்

காலை 6.30 மணியளவில் மைதானம் ஒன்றில் உடற் பயிற்சி செய்து கொண்டிருக்கையில் திரு. அமரபால சுடப்பட்டார்.

சுங்கத் திணைக்களம் சம்பந்தமான பல முக்கிய விசாரணைகளை திரு. அமரபால மேற்கொண்டிருந்தார் — இப்படி பிரதம சுங்க கலக்டர் திரு. எச். பி திஸநாயக்கா தெரிவித்தார்.

(இ-எ)

## இன்று முதல் பஸ் சீசன் ரிக்கெட்

யாழ்ப்பாணம், பெப். 28

பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சீசன் ரிக்கெட்டுகள் இன்று முதல் கோண்டாவில் டிப்போவிலும் யாழ் பஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்படும்.

ஜனவரி, பெப்ரவரி மாத பழைய சீசன் ரிக்கெட்டுக்களை வைத்திருப்பவர்கள் அதனை பஸ் நிலையத்தில் சமர்ப்பித்து புதிய ரிக்கெட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

புதிதாக சீசன் ரிக்கெட்டைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர் (8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

28 02 1987

சனிக்கிழமை

சுபநேரம்:

3-29 முதல் 4- 59 வரை

ராகுகாலம்:

9-29 முதல் 10-59 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## மகன் தலையை உராய்ந்து கொண்டு சென்ற சன்னம்

### தந்தையின் நெஞ்சிற்குள் பாய்ந்தது

யாழ்ப்பாணம், பெப் 28

மகனின் தலையை உராய்ந்து கொண்டு சென்ற சன்னம் தந்தையின் நெஞ்சில் பாய்ந்து உயிரை எடுத்துச் சென்றது.

இச்சம்பவம் வியாழக்கிழமை தெல்லிப்பளையில் நடைபெற்றது.

மரணமானவர் வயாவிளானைச் சேர்ந்த அல்பிரட் பரராஜசிங்கம் (55 வயது)

இவரது பெயர் நேற்றைய உதயனில் சுப்பிரமணியம் என தவறுதலாகப் பிரசுரமாகி இருந்தது

அல்பிரட் பரராஜசிங்கம் வயாவிளானில் நடைபெற்ற இராணுவ அசம்பாவிதங்களால் தெல்லிப்பளைக்கு இடம்பெயர்ந்து குடும்பத்துடன் கடந்த 8 மாதங்களாக தங்கியிருந்தவர்.

சம்பவதினம் காலை 8 மணி அளவில் தனது இரண்டு இளைய பிள்ளைகளையும் சைக்கிளில் கூட்டிக்கொண்டு தமது வயாவிளான் வீட்டைப் பார்வையிடச் செல்ல தெல்லிப்பளையில் இருந்து புறப்பட்டார்.

சிறிது தூரம் சென்றதும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. சைக்கிளை அவர் தெல்லிப்பளை வீட்டை நோக்கித் திருப்பினார். வீட்டை அண்மிக்கும் போது இரு ஹெலிகள் நடத்திய தாக்குதலில் நெஞ்சில் சன்னம் பாய்ந்து அந்த இடத்திலேயே அவர் மரணமானார்.

இவரின் பிள்ளைகளில் ஒன்றான ஜோய் (12 வயது) காலில் சன்னம் பாய்ந்த காயத்துடன் மயிரிழையில் உயிர் தப்பினார் இவரது பிறந்த தினம் அன்றுகும்.

மற்றப் பிள்ளையான வின்சன் (8 வயது) தலையில் சன்னம் உராய்ந்து சென்ற சிறிய காயத்துடன் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

இவர் (வின்சன்) சம்பவம்பற்றி எமது செய்யாளருக்குத் தெரிவிக்கையில்,

"ஹெலிகள் இரண்டு எம்மை துரத்திச் சுட்டன, அப்பா பயத்தால் வீதியோர மதிலுடன் சைக்கிளைச் சாத்தி நிறுத்த முயன்றார்

நான் பயத்தால் தலையைக் குனிந்தேன் எனது தலையை உராய்ந்து சென்ற சன்னம் அப்பாவின் நெஞ்சினுள் பாய்ந்தது.

எனது தலையைத் தொட்டபோது மயிர்கள் கையோடு ஒட்டிய படி வந்தன."

இப்படி அவர் கூறினார்.

காலஞ் சென்றவரின் ஒரு மகன் சென்றமாதம் வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்ற சமயம் பொலிசாரால் (8 ஆம் பக்கம் பார்க்க)

### கிரிக்கெட் விளையாடும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், பெப் 28

பரந்தன் சந்தியில் முகாமிட்டிருக்கும் சிப்பாய்கள் தமது முகாமைப் பலப்படுத்தி வருவதுடன் மாலை நேரங்களில் பிரதான வீதியில் நின்று கிரிக்கெட்டும் விளையாடுகிறார்களாம்.

இராணுவ உடையுடனும் சாதாரண உடையுடனும் நின்று விளையாடும் சிப்பாய்கள் "நாமும் புலிகளும் கிரிக்கெட் விளையாடுகிறோம்" என்று பஸ் பிரயாணிகளிடம் தெரிவிக்கின்றனராம்.

சிப்பாய்களின் கிரிக்கெட் ஒருபுறம் நடக்க அதேவீதியால் வாகனப் போக்குவரத்தும் ஓரமாக நடைபெற்று வருகிறது. (இ-10)

## சிவராத்திரியன்று ஆலயங்கள் மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 28

மகாசிவராத்திரியன்று பக்தர்கள் மாவிட்டபுரம், கீரிமலை ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்ய முடியாதவாறு இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களை மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது

மேற்படி ஆலயங்கள் சேதப்படுத்தப் பட்டது- பொது மக்கள் சிலர் கொல்லப்பட்டது- வழிபாட்டுச் சுதந்திரம் மீறப்பட்டது- ஆகியவற்றை மேற்படி இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது

நேற்று நடைபெற்ற நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் இதுதொடர்பான கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

சட்டத்தரணி திரு. இ. சிவரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இத்தகைய செயல்கள் தொடர்ந்து இடம்பெறுவண்ணம் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச அபிவிருத்தி-இந்து கலாசார அமுலாக்கல் அமைச்சை மனித உரிமைக்கான வெகுஜன இயக்கம் வலியுறுத்து கிறது. (இ-10)

### சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

தமிழ் ஈழம் போர் நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு இன்று (சனி) மாலை 5 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

### நெடுங்கேணியில் 67 பேர் கைது!

யாழ்ப்பாணம், பெப் 28

நெடுங்கேணிப் பகுதியில் சிப்பாய்கள் 67 பேரைக் கைது செய்தனர்.

மூன்று வாகனங்களும் தீக்கிரையாக்கப் பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இந்த சம்பவம் நடந்தது.

(இ-10)

## சென்னை- உண்ணாவிரதத்தில் பங்கு பற்றியோர்

சென்னை மரீனா கடற்கரையில் கடந்த புதன்கிழமை நடத்திய இலங்கைத் தமிழர் அமைப்புக்களின் உண்ணாவிரதத்தை முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் முடித்து வைத்தார்.

தமிழர் அமைப்புக்களின் சார்பில் கலந்து கொண்ட பிரமுகர்கள் விவரம் வருமாறு:

தமிழர் விடுதலைக் கூட்டணி:- திருவாளர்கள் எம் சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன், வெ. யோகேஸ்வரன், பண்டிதர் கா. பொ. இரத்தினம், மாவை சேனாதிராசா, திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்.

தமிழீழ விடுதலை இயக்கம்:- திரு. செல்வம்.

ஈ. பி ஆர். எல் எவ்: திருவாளர்கள் டேவிட்சன், டக்ளஸ் தேவானந்தா.

புளொட்:-திரு. இரா. வாசுதேவா.

ஈரோஸ்:- திரு இரத்தின சபாபதி.

பேரட்டி புளொட் இயக்கம்:- திரு. அன்னலிங்கம்.

புரொடெக்:- திருவாளர்கள் எஸ். சி. சந்திரகாசன், அ. தங்கத்துரை, ஈழத்து நாதன்.

இயக்கங்களின் தொண்டர்களும் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டனர். (இ-எ)

## 3 சிங்கள மீனவரையும் திருமலைப் பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்க புலிகள் தயார்

யாழ்ப்பாணம், பெப். 28

வல்வெட்டித்துறை கடற்கரையில் இழுவைக் கப்பலுடன் கரை ஒதுங்கிய மூன்று சிங்கள மீனவர்களையும் திருமலைப் பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்கத் தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

திருகோணமலைப் பிரஜைகள் குழுவின் இணைச் செயலாளர்கள் திருமதி சுபாஷிணி வரதன், வண. பிதா பீட்டர் குருகுலராச்சி ஆகியோரின் வேண்டுகோளைத் தொடர்ந்தே தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த முடிவை எடுத்திருக்கின்றனர்.

திருகோணமலைப் பிரஜைகள் குழுவினர் நேரடியாக யாழ்ப்பாணம் வந்து மூன்று சிங்கள மீனவர்களையும் பொறுப்பேற்றுச் செல்லலாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் பத்திரிகை மூலம் விடுத்த அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளனர்.

இம் மூன்று சிங்கள மீனவரும் கடந்த மாதம் 11ஆம் திகதி வல்வெட்டித்துறை கடற்கரையில்

## கருத்துக் கலசம்

மயூரா

### இரட்டிப்புச் சாதனை!

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். ஒரு விடயத்தில் ஆர்வம் இருந்தால் அதனைச் செய்து முடிப்பது கஷ்டமல்ல

தொழில் நுட்பக் கருவிகளை மேலைநாடுகளால் மட்டும்தான் உற்பத்தி செய்ய முடியும் என்பதல்ல. கீழைத் தேசங்களில் ஒன்றான ஜப்பான் இப்போது விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளில் பல விடயங்களில் மேலைத்தேசங்களைவிட முன்னணி வகிக்கின்றது.

அதற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் திறமையும் கடும் முயற்சியும் ஆகும். கஷ்டங்கள் வரும் போது மனிதனை அறியாமலே அதீதபேராற்றல் வருவது இயற்கை. ஹிரோஷிமா குண்டு வெடிப்புப் பாதிப்பின் பின் ஜப்பானிலே மக்களுக்கு தம்மைத்தாம் பலப்படுத்த வேண்டும் என்ற உத்வேகம் பிறந்தது.

அதன் விளைவாக ஜப்பான் விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் துரித வளர்ச்சி கண்டுள்ளது.

திறமையும் ஆர்வமும் முயற்சியும் நிச்சயம் சாதனை புரிய உதவும் என்பதை நாம் நேரிலும்கண்டிருக்கின்றோம். ஆம், ஆய்வு நிறுவனத்தினரின் சாதனையையே இங்கு குறிப்பிடுகிறோம்.

பனை, தென்னை, கமுகு போன்ற நெடிய மரங்களில் இலகுவாக ஏறுவதற்கு உகந்த இயந்திரம் ஒன்றைப் பிரஸ்தாப நிறுவனத்தினர் உருவாக்கியுள்ளனர். (7ஆம் பக்கத்தில் விவரணக் கட்டுரை).

எங்கள் மக்களின் திறமைக்கும் முயற்சிக்கும் அது ஒரு சின்னம், இன்னமும் எத்தனையோ சாதனைகளை- கண்டுபிடிப்புகளை உருவாக்கலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு - முன் உதாரணம்.

எம்மைச் சூழ்ந்துள்ள பொருளாதாரக் கஷ்டங்களில் இருந்து விடுபடும் ஆற்றல் எமக்கு உண்டு என்பதையும் அது எடுத்துக் காட்டுகின்றது

அது மட்டுமன்றிப் பெரும் சமுதாய மாற்றங்களைக் கொண்டு வரவும் புதிய இயந்திரம் வகை செய்யும் யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்துக்கு ஆணிவேராக உள்ள பனையில் ஏறுவதை எவரும் செய்யக்கூடிய தொழிலாக மாற்றுவதற்கு அது வகை செய்கின்றது.

அதன் மூலம் பல்லாண்டு காலம் மண்டிப்போயிருக்கும் தொழில் ரீதியான பாகுபாட்டுக்கு விரைவில் முடிவுகட்ட அது வழிசெய்யும். ஆகையால் ஆய்வு நிறுவனத்தின் கண்டுபிடிப்பை இரட்டிப்புச் சாதனையாகக் கருதவேண்டும்.

எங்களிடம் உள்ள திறமைகளை வளர்ப்போம். அவற்றைச் செயலாக்க ஊக்கம் (8ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரங்கள் ★
★★★★★★★★★


சேவை

தினசரி எங்களுடைய ஸ்தாபனம் இரவு 8 45 வரை திறந்திருக்குமென அறியத் தருகின்றோம். யாழ் சைனீஸ் ரெஸ் ரோறன்ற், 124,( RR நல்லையா வீதி முதலாம் குறுக்குத்தெரு), யாழ்ப் பாணம். தொலைபேசி 23460.


## நாய்க்குட்டி இலவசம்

முழங்காவில், பெப். 28 பூநகரி வாடியிலுள்ள இராணுவத்தினர், தமது முகாமில் உள்ள கட்டாக்காலி நாய்கள் ஈன்ற குட்டிகளை முகாம் பகுதியால் செல்லும் மக்களுக்கு இலவசமாக வழங்கினார்கள் (ஆ-ரி)

# புதிருக்கு இன்னும் விடை இல்லை!

# சிம்மாசனங்கள் மோதுகின்றன; விளைவு எப்படியாகும்?

சிம்மாசனங்கள் மோதிக்கொள்கின்றன.

ஜெயவர்த்தனாவின் நாடாளுமன்ற உரைக்கு ஷெயில் சிங்கின் நாடாளுமன்ற உரை பதிலாக அமைந்துள்ளது.

ஷெயில் சிங் கண்டனத்துடன் தெரிவித்த கவலை ஜெயவர்த்தனாவுக்கு மகிழ்ச்சி அளிக்க வில்லையாம்.

ஷெயில் சிங்கின் உரையை இந்திய நாடாளுமன்றம் விவாதிக்கத் தொடங்கும் முன்னரே இந்தியத் தூதரை அழைத்த வெளிவிவகார அமைச்சர் சாகுல் ஹமீது கூறிவிட்டார்

உலக அரங்கில் இலங்கைக்கு அவமானத்தை ஏற்படுத்துவதால் இந்தியா என்ன பயனை அடையப் போகின்றது?

அண்மையில் அமெரிக்காவுக்கு சென்று இனப் பிரச்சினைப் பேச்சுக்களை நடத்தி விட்டுத் திரும்பிய வெளிவிவகார அமைச்சர் ஹமீது இந்தியத் தூதரிடம் மேற்கண்ட கேள்வியை வேறு எழுப்பி இருக்கிறார்.

### சித்திரவதை நாடு

சித்திரவதை செய்யும் நாடுகள் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ள 'பெருமை' பெற்ற இலங்கைக்கு இந்தியாவினால் இனியும் ஓர் அவமானம் வரப் போகின்றதா?

ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு விரைவில் இலங்கை பற்றிய அறிக்கையை விசாரிக்கத் தொடங்க உள்ளது.

அந்த விசாரணையில் இலங்கைத் தமிழர் மீதான அண்மைக்கால அரச அடக்குமுறைகள் பற்றி இந்தியா காரசாரமாக தெரிவிக்கப் போகிறது என்பதுஇலங்கைக்கு 'மணத்து' விட்டது.

ஷெயில் சிங்கின் நாடாளுமன்ற உரை அதை கோடிட்டுக் காட்டியுள்ளது

'உலக அரங்கில் இலங்கைக்கு அவமானத்தை ஏற்படுத்துவதால் என்ன பயன்......' என்று இந்தியாவை இலங்கை கேட்டதன் அர்த்தமே அதுதான்.

இப்படி அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

புதுடில்லி— கொழும்பு சிம்மாசனப் பேச்சுக்களின் மத்தியிலே,—

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் இன்று...

## உள்ளும் புறமும்

குறுமுனி

போட்ட 'கல்'லாக உள்ளது

அத்துலத்முதலி ஆஸ்திரேலியாவில்; அதே வேளை தர்மிஷ்டர் மாலைதீவு செல்ல நாள் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

### புதிருக்கு விடை காணோம்

தாக்குதல் தொடரும் என்றால் பேச்சுக்கள் தொடராது என்ற இந்தியப் புதிருக்கும்—

தாக்குதலை நிறுத்தினால் தாக்குதலை நிறுத்துவேன் என்ற இலங்கைப் புதிருக்கும் இன்னும் விடை கண்டுபிடிக்கப் படவில்லை. 'நுணலும் தன் வாயால் கெடும்' என்பது அனுபவமொழி.

இலங்கை அரசின் 'ஊசலாடும்' கொள்கையினால்தான் இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் முன்னேற்றம் அடைய முடியாமல் உள்ளன என்று இந்தியப் பிரதமர் ஒரு முறை கருத்து வெளியிட்டிருந்தார்.

### கதையின் தாக்கம்

அதற்கு பதில் அளிக்க முற்பட்ட தர்மிஷ்டர் தனது புத்தருக்கும் பிரதமர் காந்திக்கும் காஷ்மீர் பிராமணனுக்கும் ஒப்பிட்டுக் கதை ஒன்றை அதுவும் இந்தியப் பத்திரிகையாளரிடம் அவிழ்த்து விட்டிருந்தார்!

அந்தக் 'கதை'யின் தாக்கம் தான் இன்று தர்மிஷ்டருக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கியுள்ளது.

ஒருவர் வீசும் குப்பைகளை நான் ஏற்காவிட்டால் அவை திரும்பி வீசியவரிடமே செல்லும் என்று தர்மிஷ்டரின் கதை அமைந்திருந்தது

கற்பனை உலகில் சஞ்சரிக்கும் கொழும்பு பத்திரிகைகளோ தர்மிஷ்டரின் 'கதை'யை 'காவிய'மாக்கி இன்று அவரைப் 'பரிதாப' நிலைக்கு தள்ளி விட்டன.

'ஊசலாடும் கொள்கை' என்று சொன்னதற்கு 'உபதேசம்' செய்தவரை ''உறுதியான கொள்கையோடு வாரும்'' என்று சிம்மாசனப் பிரசங்கத்தின் மூலம் அறிவிக்கப் பட்டு உள்ளது.

'உறுதி கொண்ட நெஞ்சுடன் வா! வா!' என்ற இந்தியாவின் அழைப்பை தர்மிஷ்டர் ஏற்பாரா? செல்வாரா? பேச்சு நடத்துவாரா? பிரச்சினைக்குத் தீர்வு காணுவாரா?

ஆஸ்திரேலியாவில் இருந்து அத்துலத்தார் வந்த பின்னர் தான் எல்லாம் வெளிச்சமாகுமோ? ★

## ஜே.ஆருக்கு ஒரு நினைவூட்டல்

முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் புதைப்பது எப்படி?

தர்மிஷ்டர் அரசைக் கேட்டுத் தான் இதற்குப் பதில் தெரிந்து கொள்ள வேண்டும்.

எனது அரசப் படைகள் குடிமக்கள் மீது தாக்குதல் நடத்தவும் இல்லை; நடத்தவும் மாட்டா.

(The Government of Sri Lanka has never carried out military operations against civilians nor ever will).

இப்படி நாடாளுமன்ற உரையில் அழுத்தந்திருத்தமாக தர்மிஷ்டர் தெரிவித்தார்.

இந்த உரை, புதை குழிக்குள் மூடப்பட்டு இருக்கும் அப்பாவி மக்களின் சடலங்களை அசைய செய்து இருக்கும்; டயர் போட்டு எரிக்கப்பட்டவர்களின் சாம்பரைத் தவிர.

இப்படி துணிச்சலுடன் சொன்னதற்காக தர்மிஷ்டருக்கு ஒரு 'ஜே' போடவேண்டும்.

இருந்தும் தர்மிஷ்டரிடம் ஒரே ஒரு கேள்வி;

ஐயா,

கடந்த நவம்பரில் பெங்களூர் சென்று நந்தியிடம் உபதேசம் பெற்றீர்கள்.

பின்னர் 'சார்க்' மாநாட்டில் எங்களுடைய பிரச்சினை பற்றிப் பேசினீர்கள்

அப்போது காந்திஜியின் அஹிம்சை, ராஜீவ் காந்தியின் பாட்டனார், கொள்ளுப் பாட்டனார் ஆகியோருடன் பழகிய சம்பவங்கள் பற்றிச் சொன்னீர்கள்.

இன்னும் ஒன்று சொன்னீர்கள் அது எங்கள் மனதில் ஊன்றி பதிந்து விட்டது

''எனது பிரசை ஒவ்வொருவரின் இருதயத்தினூடாக துளைத்துக் கொண்டு செல்லும் துப்பாக்கிக் குண்டு ஒவ்வொன்றும் எனது இருதயத்தையும் துளைத்துக் கொண்டு செல்கிறதே!—

(Everytime a bullet whether it be from security forces or terrorists, strikes my citizen, it goes deep into my heart.)

இப்படி நீங்கள் பேசியதை, உங்கள் நாடாளுமன்ற உரைக்குப் பின் வரும் மறக்க முடியாமல் உள்ளதே ★

## ரஷ்யத் தூதுவர் சொன்னது

இலங்கை - ரஷ்ய ராஜதந்திர உறவுகள் ஆரம்பித்து 30 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது.

இது பற்றி ரஷ்யத் தூதர் செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தினார்.

அந்த மாநாட்டில் ரஷ்ய தூதர் தெரிவித்த ஒரு தகவல் வருமாறு:

''இலங்கை தனது உள் நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாதபடி சர்வதேச சக்திகள் சில நெருக்கடிகளைக்கொடுத்து வருகின்றன''

தூதர் தெரிவித்த இத்தகவல் கொழும்புப் பத்திரிகைகளில் பிரசுரமாகவில்லை. ★

## ராஜீவ் அனுப்பிய 3 அம்சக் கடிதம்

### தயாரான பின்னணி

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை அரசுக்கு 3 அம்ச கடிதத்தை அனுப்பி இருந்தார் அல்லவா!

அக்கடிதத்தை அனுப்புவதற்கு முன்னர் புதுடில்லியில் நடந்த சில ராஜதந்திர நடவடிக்கைகள் பற்றி கிடைத்த தகவல்கள் இவை!

கொக்கட்டிச்சோலைப் படுகொலையைத் தொடர்ந்து முதல் அமைச்சர் திரு. இராமச்சந்திரன் பிரதமர் திரு காந்தியைச் சந்தித்தார்.

துருப்புகளை விலக்கிக் கொள்வது குறித்து இந்திய- பாகிஸ்தான் உடன்பாடு கைச்சாத்திடப் பட்ட பின்னர் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைத் தமிழர் படுகொலை பற்றி ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டது.

இந்திய நாடாளுமன்ற வெளியுறவு ஆலோசனைக் குழு மூன்று தடவைகள் அடுத்தடுத்துக் கூடி நீண்ட நேரம் இலங்கை நிலை பற்றி ஆராய்ந்தது

அதன் பின்னர் மூன்று அம்சப் பதில் தயாரிக்கப் பட்டது

தொடர்ந்து வெளியுறவு அமைச்சர் திரு திவாரி புதுடில்லியில் உள்ள ரஷ்யத் தூதரைச் சந்தித்து இலங்கை நிலையைத் தெரிவித்தார்.

இணை அமைச்சர் அருண்சிங் புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரைச் சந்தித்து இலங்கை நிலையை விவரித்தார்.

அதன் பின்னர் மூன்று அம்சக் கடிதம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ★

# அரசாங்க அலுவலகங்களில்

சிகதி

## அரசியல் புத்தர்கள்

உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் பல அமைப்புக்கள் சில சமயங்களில் நடைமுறைகள் இடத்திற்கு இடம் மாறுகின்றன. இன்னும் சில சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகளும் நடைமுறைகளைத் தேவைக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்கின்றனர்.

அண்மையில் நகரசபை ஒன்றில் உதவி நூல் நிலையப் பொறுப்பாளர் பதவிக்கு சபையின் தீர்மானம் இல்லாமலே வர்த்தமானியில் வெளியாக உள்ள இடத்திற்கு அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. அது பெரும் சர்ச்சையை உண்டு பண்ணியிருந்தது, இதற்கிடையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடைபெற்று தெரிவும் பூர்த்தியாகிவிட்டது.

பின்னர் சபையின் தீர்மானப்படி யாவும் ரத்துச் செய்யப்பட்டு புதிய அறிவித்தல் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படவேண்டுமெனச் சபை தீர்மானித்தது இதனால் பணம், நேரம் முதலியன தேவையற்ற முறையில் விரயம் செய்யப்படுவதுடன் விண்ணப்பதாரர் மத்தியிலும் பெரும் மனத்தாக்கம் உண்டானது இதற்குரிய திணைக்களப் பிரிவுகள் இது பற்றிப் பொதுவான சுற்று நிருபங்களை காலத்திற்கு காலம் அனுப்பி முறைப்பாடுகளை நீக்க வேண்டும் அத்துடன் பணம் சம்பந்தமான நிகழ்வுகள் ஏற்பட்டால் அவற்றுக்குப் பொறுப்பாக நின்று செயற்பட்டவர்களிடம் இருந்து அறவிடுவதுடன் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். சில இடங்கள் புனித நகரங்களாகப் பிரகடனப்படுத்தப் படும் பொழுது அந்த இடங்களில் உள்ள பல செல்வாக்குப் பெற்றோரின் நிறுவனங்களைத் தொடர்ந்தும் இயங்குவதற்குச் சில திணைக்களங்கள் அனுமதிக்கின்றன அண்மையில் ஒரு நகரத்தை புனித நகரமாக பிரகடனம் செய்ய ஆராயப் பெற்றபோது மதுபான நிலையமொன்றினையும் அங்கே தொடர்ந்தும் இயங்க அனுமதிக்கலாம் எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது. அத்துடன் கண்டியிலுள்ள தலதா மாளிகையைச் சுற்றி 13 மதுபான நிலையங்கள் இருந்தும் அதனால் எந்த விதமான அபகீர்த்தியும் ஏற்படவில்லையெனவும் காரணம் கற்பிக்கப்பட்டது புனிதம் என்ற பெயருக்குப் புத்தபகவான் தான் இனி விளக்கம் கொடுக்க வேண்டும். அரசியல் புத்தர்கள் இதனை ஏற்றுக் கொள்வார்களா?

★ ★ ★

நிதி விடயங்களை தீர்மானிப்பதும், வட்டி விகிதம், நிதிச் சலுகைக் கட்டுப்பாடுகள் பற்றி நிர்ணயிப்பதும் மத்திய வங்கியின் சில கடமைகளாகும் இங்கே வங்கிகள் இருந்தும்கூட நிதி நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் இந்த நிறுவனங்களின் சேவையால் பெரிதும் நன்மை பெற்று வருகின்றனர் !;

அண்மையில் மத்திய வங்கி நடத்திய கருத்தரங்கொன்றில் மத்திய வங்கியின் அண்மைக்கால நடைமுறை விதி பற்றி அங்கு கலந்து கொண்ட நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளால் விமர்சிக்கப்பட்டது.

நிதிநிறுவனங்கள் ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னரே பத்திரிகை விளம்பரங்கள் மூலம் முதலீடுகள் பற்றிய விபரங்களை பிரசுரித்து அவற்றுக்கான வைப்புப்பணம் கோரலாம் என்பதேயாகும். 15 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்த நிதிநிறுவனம் ஒன்றின் பிரதிநிதி இந்த நடைமுறையினால் தமது நிறுவனம் பாதிக்கப்படுவதாகவும், தாம் இது பற்றி மத்திய வங்கிக்கு பேசுவதற்குச் சென்றபோது சம்பந்தப்பட்ட ''நடைமுறையை செயற் படுத்தாத எந்த நிறுவனமும் குற்றம் புரிந்தவர்களே'' என்ற கருத்துப் பட ஓர் அதிகாரி தெரிவித்ததை நினைவு படுத்தி தனது கவலையும் தெரிவித்துக் கொண்டார்.

இலங்கை அரசியல் சாசனத்தில் பேச்சு சுதந்திரத்துடன் விளம்பர சுதந்திரமும் தொடர்புடையது என்ற கருத்துப்பட ஜனாதிபதி அண்மையில் பேசிய சம்பவம் ஒன்றினையும் வேறு ஒரு பிரதிநிதி தெரியப்படுத்தினார் அதன் பின்னரும் அதற்கான திர்க்கமான பதில் அக் கருத்தரங்கில் தெரியப்படுத்தப்படவில்லை. எந்த ஒரு நிறுவனமும் அதன் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதானால் விளம்பரம் தேவை. ஆனால் சில காரணங்களுக்காக நிதி நிறுவனங்களுக்கு இந்த நடைமுறை ஏற்படுத்தப் பட்டதாகக் கருதினாலும் மத்தியவங்கி ஒவ்வொரு நிதி நிறுவனத்தின் செயற்பாடுகளையும் ஆராய்ந்து அதன் கணிப்பின் பேரில் விளம்பரம் செய்ய அனுமதிப்பதில் எதுவித தவறும் ஏற்படுவதற்கு இடமிருக்காது

★ ★ ★

திணைக்களக் கண்காணிப்பு இல்லாததன் காரணமாகத்தான் கசிப்பு அருந்தி பலர் இறப்பதாக இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் இச்சம்பவம் பற்றி புதிய உண்மை தெளிவு படுத்தப்பட்டுள்ளது இச் சம்பவத்தில் ஈடுபட்டு இறந்தவர்கள் 1983-ம் ஆண்டில் இடம்பெற்ற வன்செயல்களுக்கு மூல காரணமாக இருந்தவர்களெனவும் சர்மதோஷம் இவர்களைப் பிடித்துக் கொண்டதெனவும் பிறருக்கும் இந்தக் கதிதான் கிடைக்கும் எனவும் முன்னாள் பொலீஸ் அதிகாரி ஒருவர் ஆங்கில பத்திரிகை ஒன்றின் கட்டுரையாளருக்கு தெரிவித்த கருத்து வெளியிடப்பட்டது 'உண்மை' தலைமுறையில் தான் தெரிய வருகிறது. ★

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய மதிப்பு விபரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது:

(இது இலங்கை வங்கியின் 27 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்.)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில் |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 43. 69 |
| அமெ. டாலர் | 28. 58 |
| இந்திய ரூபா | 2. 17 |
| ஜேர்மன் மார்க் | 15. 46 |
| கனடா டாலர் | 21. 15 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 64 |
| பிராங் (சுவிஸ்) | 18. 14 |
| அவுஸ். டாலர் | 18. 84 |

# றேகன் நிர்வாகத்தை ஆட்டம்காணவைக்கும் ரவர் கமிஷன் அறிக்கை

## நொண்டி வாத்து நிலையிலும் விதி தொடர்கிறது

'ஈரான் கேட்' விவகாரம் தொடர்பாக கடந்த மூன்று மாதகாலமாக விசாரணை நடத்திய ரவர் கமிஷன் அறிக்கை நேற்று முன்தினம் அதாவது வியாழக்கிழமை வாஷிங்டனில் வெளியிடப்பட்டது.

'வாட்டர் கேட்' விவகாரத்தின் பின்னர் அமெரிக்க அரசியல் நிர்வாகத்தின் குரல்வளையையே நசுக்கும் அளவுக்கு இந்த 'ஈரான் கேட்' விவகாரம் விஸ்வரூபம் எடுத்திருந்தது வாசகர்கள் அறிந்ததே

அமெரிக்காவினால் ஈரானுக்கு எதிராக விதிக்கப்பட்ட ஆயுத விநியோகத் தடையை மீறி ஈரானுக்கு ரகசியமாக ஆயுத விநியோகத்தை மேற்கொண்டது—

அதில் கிடைத்த லாபத்தை நிக்கராகுவா அரச எதிர்ப்புக் கெரில்லாக்களுக்கு வழங்கியது—

ஆகிய சம்பவங்கள் அம்பலத்துக்கு வந்ததை அடுத்தே 'ஈரான் கேட்' விவகாரம் சர்வதேச அரங்கில் சூடு பிடிக்க ஆரம்பித்தது.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் டெக்ஸாஸ் செனட்டர் இந்த விவகாரத்தை விசாரிக்க நவம்பர் 2 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

### இருவர் சாட்சியம் அளிக்க மறுப்பு

ஜனாதிபதி றேகன் இந்த கமிஷன் முன்னர் இரு தடவை சாட்சியம் அளித்திருந்தார்.

இந்த விவகாரத்தின் சூத்திரதாரிகளாகக் கருதப்பட்ட அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையின் முன்னாள் உதவியாளர் ஒருவர் நோர்த்.

தேசிய பாதுகாப்புச் சபையின் முன்னாள் ஆலோசகர் ஜோன் பொய்ன்டெக்ஸ்டர் ஆகியோர் கமிஷனின் அழைப்பை உதாசீனம் செய்து கமிஷன் முன் ஆஜராகிச் சாட்சியம் அளிக்க மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

ஒருவர் தமக்கு எதிராக தாமே சாட்சியம் அளிக்க நிர்ப்பந்தம் செய்ய முடியாது என்ற அமெரிக்க அரசமைப்பின் சரத்தை சாதகமாகப் பயன்படுத்தி இவர்கள் இருவரும் கமிஷன் முன் ஆஜராகவில்லை.

### கிரிமினல் குற்றச்சாட்டு இல்லை

நேற்று முன்தினம் வாஷிங்டனில் வெளியிடப்பட்ட கமிஷனின் அறிக்கையில் ஜனாதிபதி றேகன் மீது வழக்குத் தொடரப்படும் அளவுக்கு கிரிமினல் குற்றம் எதுவும் சாட்டப்படவில்லை

ஆனால் இந்த விவகாரத்தில் றேகன் தவறு இழைத்துவிட்டார் என்றும் இதற்குப் பொறுப்பாக இருந்த தேசிய பாதுகாப்புச் சபையைத் தகுந்தவாறு கண்காணிக்கத் தவறி இருந்தார் என்றும் கமிஷன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரவர் விசாரணைக் கமிஷன் அறிக்கையில் விவாதப் பரிசீலனை செய்து கமிஷனின் சிபார்சுகளுக்கு இணங்கி நடவடிக்கை எடுப்பேன் என்று ஜனாதிபதி றேகன் நேற்று வெள்ளை மாளிகையில் அறிவித்தார்.

அடுத்த வாரம் இந்த விவகாரம் தொடர்பாக தாம் டெலிவிஷனில் அறிக்கை விட இருப்பதாகவும் அவர் கூறி உள்ளார்.

ரவர் கமிஷன் அறிக்கை இனி விவாதிக்கப்படும் போது மேலும் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் பிரகாரம் றேகனின் உதவியாளர்கள் சிலர் மீது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படலாம்.

### ஒலிவர் நோர்த்

''ஈரான் கேட்'' விவகாரம் அம்பலத்துக்கு வந்தவுடன் ஜனாதிபதி றேகனால் தண்டிக்கப்பட்ட முதலாவது தேசிய பாதுகாப்புச்சபை அதிகாரி ஒலிவர் நோர்த் ஆவார்.

ஈரானுக்கான ஆயுத விநியோகத்தால் கிடைத்த லாபத்தை நிக்கராகுவா அரச எதிர்ப்புக் கிளர்ச்சிக்காரர்களுக்கு வழங்குவதில் நேரடித் தொடர்பு கொண்டிருந்தவர் தான் இந்த ஒலிவர் நோர்த்.

இந்த விவகாரம் அம்பலத்துக்கு வந்த பின்னர் தேசிய பாதுகாப்புச் சபை ஆலோசகர் ஜோன் பொய்ன் டெக்ஸ்டர் பதவியில் இருந்து விலகிக் கொண்டார்.

தற்போது ரவர் கமிஷன் அறிக்கை வெளியாகி இருப்பதால் தேசிய பாதுகாப்புச்சபைத் தலைவர் டொனால்ட் ரீகனும் அடுத்த ஒரு சிலநாட்களில் தமது பதவியைத் துறக்கலாம் என்று அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

### உறவு துண்டிப்பு

ஈரானில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் ஒரு வருடத்துக்கு மேல் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த சம்பவத்தை அடுத்து ஈரானுடனான தொடர்புகளை அமெரிக்கா துண்டித்திருந்தது.

ஈரானுக்கான ஆயுத விநியோகத்துக்கும் அமெரிக்கா தடைவிதித்திருந்தது.

இந்த தடையை மீறி 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தடவையாக இஸ்ரவேல் மூலம் ஈரானுக்கு அமெரிக்க ஆயுதம் விநியோகிக்கப்பட்டது.

இந்த ஆயுத விநியோகம் குறித்து தம்மால் முன் அனுமதி வழங்கப் பட்டதா இல்லையா என்பது குறித்து திடமாகச் சொல்ல முடியாதிருப்பதாகவும் தாம் மறந்து போனதாகவும் ரவர் கமிஷன் முன் றேகன் தெரிவித்திருந்தார்.

ஆயுத விநியோகத்துக்கு முன்னரேயே றேகன் இது பற்றி அறிந்திருந்தார் என்று தேசிய பாதுகாப்புச் சபையின் முன்னாள் தலைவர் றொபேர்ட் மக்பார்லேன் தெரிவித்திருந்தார்

அவர் பின்பு தற்கொலை முயற்சி ஒன்றின் பின் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார்.

றேகனின் ஞாபக மறதி, ஒலிவர் நோர்த், ஜோன் பொய்ன்டெக்ஸ்டர் ஆகியோர் சாட்சியமளிக்க மறுப்பு, என்பன ''ஈரான் கேட்'' விவகாரத்தை மூடி மறைக்க இயன்ற அளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்பதைப் புலப்படுத்துகின்றன.

இரண்டாவது தவணையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டு, எஞ்சிய இருவருட காலத்தை நொண்டி வாத்து நிலையில் கழித்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதி றேகனுக்கு 'ஈரான் கேட்' விவகாரம் ஒரு பெரும் தாக்கம் ஆகும்.

அமெரிக்க கீழ் சபையான காங்கிரஸிலும் மேல் சபையான செனட்டிலும் றேகனின் குடியரசுக் கட்சி சிறுபான்மைக் கட்சியாக்கப்பட்ட நிலையில் றேகனின் நிர்வாகம் தற்போது ஈடாடிக் கொண்டிருக்கிறது

நிக்கராகுவா அரச எதிர்ப்புக் கொரில்லாக்களுக்கு அமெரிக்கா உதவி செய்வதற்கு இரு சபைகளிலும் குடியரசுக் கட்சியின் சிறுபான்மை நிலையே ||காரணமாக இருந்து வருகிறது

## உலக உலா

என்.பி.சீலன்

நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாதஒன்றை சட்ட விரோதமாக செயற்படுத்த முனைந்த செயலே நிக்கராகுவா அரச எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களுக்கு நிதி உதவி வழங்கிய சம்பவம் ஆகும்.

''வாட்டர் கேட்'' விவகாரம் ஜனாதிபதித் தேர்தலில் எப்படி குடியரசுக் கட்சியை தோல்வியை நோக்கி இட்டுச் சென்றதோ அதேபோன்றே இன்று 'ஈரான்கேட்'' விவகாரம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியை தோல்வியை நோக்கி இட்டுச்செல்கிறது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஒரு பழைய வரலாறு; ஆனால் இக்காலத்துக்கு வேண்டியது

# லீடன் முற்றுகையின்போது

# நசியாது நின்ற நகர மக்கள்

ஸ்பானியர்களுடன் எண்பது ஆண்டுகளாக ஒல்லாந்தர் போர் புரிந்து தங்கள் நாட்டைக் காப்பாற்றியது சரித்திரத்திலேயே மிகவும் வீரம் செறிந்த சம்பவமாகும். மயிர்க்கூச்செறியும் சாதனை அது.

பதினாறும் நூற்றாண்டிலே ஸ்பானியா மிகவும் செல்வமும் ஆட்பலமும் கொண்ட வல்லரசாக விளங்கியது. அறுபது ஸ்பானிய கோட்டைகள் லீடன் நகரை முற்றுகையிட்டன. மக்கள் பஞ்சத்தால் தவித்தார்கள்.

நகரத் தலைவர் வீதி வீதியாக மக்களை உற்சாகப்படுத்துவதற்காக பாண்ட் வாத்தியங்களை வாசித்து வரச் செய்தார்.

முற்றுகை இடப்பட்ட நகரம் சேடம் இழுத்துக் கொண்டிருக்கிறது. ரொட்டி, மோல்ற்கேக், குதிரை இறைச்சி, நாய் இறைச்சி பூனை இறைச்சி எல்லாமே தீர்ந்து விட்டது. எலி இறைச்சி— அது கூட இல்லை மக்கள் இறைச்சியை மட்டுமல்ல மிருகங்களின் தோல் களைக் கூட தண்டு தண்டாக்கி அவித்து உண்டார்கள்.

மரங்களில் உள்ள எல்லா இலைகளுமே உருவப்பட்டு உணவாக்கப் பட்டது. பூக்கள், புல்லு

வரலாறு

கள், வேர்விராய்கள், சகலதுமே உணவாக்கப்பட்டன.

தாய்முலை பசிக்கு சுவைத்த மழலைகளுக்குப் பால் சுரக்கவில்லை. வீதிகளில் தாய்மார் தங்கள் தங்கள் குழந்தைகளைப் பற்றி படியே விழுந்து இறந்து கிடந்தார்கள். காவல் வீரர்கள் வரைச் சுற்றி வரும்போது தாய், தகப்பன், பிள்ளைகள் அனைவருமே குடும்பம் குடும்பமாக இறந்து கிடந்ததைக் கண்டனர். மரணம் அடைந்தவர்களைப் புதைக்கச் செல்பவர்கள் தங்களுக்கும் குழிகளை வெட்டி விட்டே திரும்பிச் செல்லுவது வழக்கமாகி விட்டது.

அவர்களது வேதனையைக் கண்டு இரங்கி அவர்களது வேதனையைக் குறைக்க 'பிளேக்' என்னும் கொடிய நோய் வந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். இதில் மட்டும் எண்ணாயிரத்துக்கும் அதிகமான மக்கள் மாண்டனர்.

இவ்வளவும் நடந்த போதும் மக்கள் அசையாது ஒருவருக்கொருவர் தைரியம் சொல்லி உற்சாகமாக இருந்து வந்தனர். எதிர்க்குக்கீழ்ப் படிந்தால் இதைவிட கடுமையாக அனுபவிக்க வேண்டி வரும் என்ற எண்ணத்தால் இவற்றை சகித்து வந்தனர்.

இதனை அறிந்த எதிரி மேலும் மேலும் கொடுமைகளால் நெருக்கினான்.

ஒரு சில மக்கள் அறியாமையினால் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தனர். பிணங்களைத் தூக்கிக் கொண்டு நகர பிதாவின் அலுவலகத்துக்கு முன்னால் போட்டனர். நகர பிதாவைச் சரணடையுமாறு கோஷமிட்டனர்.

சென்ற் பங்கிராஸ் தேவாலயத்துக்கு முன்னால் உள்ள முக்கோண மேடைக்கு வந்தார். நகரபிதா. வாடி மெலிந்த தோற்றம். கண்கள் உள்ளே சென்று தாடை எலும்புகள் வெளியே தள்ளியபடி ஆனால் கம்பீரமாக நின்றார் நகரபிதா. தனது தொப்பியை அசைத்து "அமைதி" என்றார். எல்லோரும் அமைதியானார்.

நகரபிதா பேசத் தொடங்கினார்.

"நண்பர்களே! எங்கள் திடசங்கற்பத்தை, தைரியத்தை விட்டு எதிரியிடம் சரணடையச் சொல்கிறீர்கள். சரணடைந்தால் நாம் தற்போது அனுபவிப்பதை விட மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதை நீங்கள் அறியீர் போலும். மனிதன் ஒருமுறைதான் மரணம் அடைவான்.

எனக்கு மூன்று விதமாக மரணம் வரக்கூடும். முதலாவதாக உங்கள் கைகளால்; இரண்டாவதாக எதிரியின் கைகளால்; மூன்றாவதாக இறைவனால். இதற்கு நான் கலங்கப் போவது இல்லை இந்த நகரம் என் பொறுப்பில் உள்ளது அந்தப் பொறுப்பை நான் தட்டிக் கழிக்கப் போவதில்லை.

உங்களுக்கு உணவு வேண்டும் இதோ எனது வாள் இருக்கிறது. அதனால் என்னை வெட்டி பங்கு போட்டு எடுத்து உண்ணுங்கள் ஆனால் சரணடையப் போகிறவன் நான் அல்ல......

— அவர் பேசி முடிக்க முன்னர் வான் அதிரக் கரகோஷம் கேட்டது. மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் வீர சபதம் இட்டனர் ஸ்பானியர்கள் எங்களை "நாய் தின்னிகள், பூனை தின்னிகள், எலி தின்னிகள், என்று கூறட்டும். ஆனால் நாங்கள் எவ்வளவு இழிந்தவர்கள் ஆனாலும் எதிரியிடம் மண்டியிடப் போவதில்லை" என்ற ஆர்ப்பரிப்போடு திரும்பினார் வீரமாகப் போரிட்டனர் வென்றது லீடன். எதிரி வாலைச்சுருட்டி எடுத்தான் ஓட்டம்.

— (ஜோன் லோத்ரொப் மோட்லி எழுதிய "டச்சுக் குடியரசின் எழுச்சி" என்ற நூலில் இருந்து மொழி பெயர்த்தவர் "ஹெலன் பேர்ணிஸ்")

# எல்லையற்ற அண்ட வெளி;

## சூரியனும் அதில் சிறு துரும்பே!

எல்லையற்ற அண்டத்தின் பருமன் எவ்வளவாக இருக்கும் என்பதை எம்மால் கற்பனை செய்தும் பார்க்க முடியாது.

இந்தப் பேரண்டத்தில் நமது சூரியமண்டலமோ இப்பரந்த பூமியில் கிள்ளி எடுக்கும் மண் அளவுக்கு நிகராகும்.

எத்தனையோ கோடானுகோடி நட்சத்திரங்கள் கொண்ட சுருள் நெபுலா (Nebula) வில் நமது சூரியன் ஒரு சிறு நட்சத்திரமாகும். இருபுறக் குவில்லை வடிவமுள்ள பால் பாதை என்ற சுருள்

எஸ். ஆர். பேரின்பநாயகம்

நெபுலாவின் நீள்விட்டம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஒளியாண்டுகளாயும் குறுகிய விட்டம் 16 ஆயிரம் ஒளி ஆண்டுகளாயும் இருப்பின் இதன் பரப்பை நம்மால் எப்படி வர்ணிக்க முடியும்? பால் பாதையின் உட்பகுதியில் இருந்து சூரியன் 40 ஆயிரம் ஒளியாண்டு தூரத்தில் உள்ளது (ஓர் ஒளி ஆண்டு = ஒரு லட்சத்து 86 ஆயிரம் X 3600X24X365 மைல்கள்)

நமது சூரியன் இருக்கும் கேலக்சி (Galaxy) யைப் 'பால்வெளி' எனலாம். இப்படிக் கோடானுகோடி கேலக்சிகள் கொண்டதே நமது பேரண்டம்.

இனி சூரியனைப் பற்றியும் சூரிய மண்டலத்தில் அடங்கியுள்ள கோள்களைப் பற்றியும் தெரிந்து கொள்வோம்.

சூரியன்

சூரியன் 8 லட்சத்து 64 ஆயிரம் மைல்கள் குறுக்களவுள்ள ஒரு சிறிய நட்சத்திரம் இது எமது பூமியில் இருந்து 9 கோடி 30 லட்சம் மைல்கள் தூரத்தில் உள்ளது ஆற்றல் கூடிய நட்சத்திரங்களின் ஆயுள் சில வருடங்களுக்கு மட்டும்தான். ஆனால் எமது சூரிய நட்சத்திரம் கதிர்களை மிதமான அளவுடன் வீசுவதால் பூமியில் உள்ள உயிரினங்களை வாழ வைப்பதுடன் தனது (Mass) பொருண்மையையும் காப்பாற்றி நிலை நிறுத்தி வருகின்றது

சூரியனில் இருந்து வெளிப்படும் ஆற்றலை பூமியில் உள்ளவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தால் ஒவ்வொரு மனிதனும் ஒரு விநாடிக்கு 60 ஆயிரம் குதிரைச் சக்தி பெறமுடியும் இதனுடைய பொருண்மை குறைந்தாலோ அல்லது கூடினாலோ பூமியில் வாழும் உயிரினங்களின் வாழ்வும் பாதிக்கப்படும்.

சூரியனில் காணப்படும் கரும்புள்ளிகள் சிறு சிறு புள்ளிகளாக காணப்பட்டாலும் உண்மையான தோற்றத்தில் அவற்றின்

வானியல்

நீள அகலங்கள், மைல் கணக்கானவை.

சுருங்கக் கூறின் நமது பூமியையே அத்தகைய ஒரு கரும்புள்ளிக்குள் புகுத்தி விடலாம் இப்புள்ளிகளே புயல்காற்றுக்கும் சூறாவளிக்கும் காரணமாகின்றன.

பூமியின் பொருண்மையை விட சூரியனின் பொருண்மை மூன்று இலட்சம் மடங்கு அதிகமானதாகும். சூரியனின் ஈர்ப்பு ஆற்றலைவிட புவியின் ஈர்ப்பு ஆற்றல் மிகக் குறைவு பூமியில் ஒரு பொருளின் நிறை ஒரு இறாத்தல் எனின் சூரியனில் அதன் நிறை 35 இறாத்தல் ஆகும்.

நாம் அறிந்த வரையில் சூரிய மண்டலத்தில் 9 கோள்களும் 31 உப கோள்களும் 1500 ஆஸ்டிராய்டுகளும் (Asteroi-ds) ஆயிரக்கணக்கான

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பணி புரியும் பெண்களுக்கு

## அளவான குழந்தைகள் அவசியம்

—இது ஒரு டாக்டர் பெண்மணியின் கருத்து

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் பகுதிநேர டாக்டராகவும் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்தவருமான டாக்டர் திருமதி கௌரி நித்தியானந்தனின் கருத்துக்கள் இவை. இவர் இரண்டு குழந்தைகளின் தாய்.

கே: பெண்கள் உத்தியோகம் பார்ப்பதால் குடும்பப் பராமரிப்பு, குடும்ப வளர்ச்சியில் பாதிப்புண்டா?

ப: ஆம். பாதிப்புண்டு. எந்த நேரமும் பிள்ளைகளின் தேவைகளை கவனிக்க முடியாதிருக்கின்றது. எனக்கு தாயார் இருப்பதால் அவரின் மேற்பார்வையுடனும் வேலைக்காரரின் உதவியுடனும்தான் பிள்ளைகளை கவனிக்க வேண்டியுள்ளது

கே: நீங்கள் வேலைக்காக எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறீர்கள்?

ப: காலை 8.30 இலிருந்து மாலை 3 30 வரை செலவிடுகின்றேன்

கே: இப்போதைய சூழலில் பிள்ளைகளின் வேலைகளையும் கவனித்து குறித்த நேரத்தில் வேலைத்தலத்திற்குச் செல்லக்கூடியதாக இருக்கின்றதா?

ப: ஆம், பிள்ளைகளை பாடசாலை அனுப்பிய பின்னர்தான் நான் வேலைக்கு புறப்படுவேன் அத்துடன் கணவனும் நானும் ஒரே இடத்தில் தொழில் புரிவதாலும் போக்குவரத்துவசதி எம்



மிடமிருப்பதாலும் சுலபமாக இருக்கிறது.

மேலும் எனது தாயாரும் சகோதரிகளும்வீட்டு வேலையில் எனக்கு ஒத்தாசைசெய்வதனாலும்வீட்டு நிர்வாகத்தில் அவர்கள் சமபங்கு வகித்துவருகின்றமையாலும் என்னால் குறித்த நேரத்துக்குச் செல்லமுடிகின்றது.

கே: தொழிலின்போது ஏற்படும் சில பிரச்சினைகளினால்— நீங்கள் வீட்டிற்குச் சென்றபின்பும்— அதன் பிரதிபலிப்பை மற்றவர்களிடம் காட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளதா?

ப: இல்லை. தொழிலின்போது பிரச்சினைகள் ஏற்பட்டாலும் வீட்டில் மற்றவர்களுக்கோ அல்லது பிள்ளைகளிடமோ அதன் பிரதிபலிப்பை நான் காட்டமாட்டேன். ஏனெனில் நான் ஒரு வைத்திய பெண்மணியாக இருப்பதால் சாதகமான மனநிலையை ஏற்படுத்திக்கொள்வேன். அத்துடன் பெண்களுக்கு பொறுமை மிக அவசியமல்லவா!

கே: எத்தனை வருடங்களாக வைத்தியதுறையில் சேவை புரிந்து வருகின்றீர்கள்?

ப: 11 வருடங்களாக. முதல் 5 வருடங்கள் சிங்களப் பகுதிகளில் பணிபுரிந்து வந்தேன் பின் 5 வருடமாக மானிப்பாய் ஆஸ்பத்திரியில் பணிபுரிந்தேன் இப்போதும் ஞாயிற்றுக் கிழமைகளில் இந்த ஆஸ்பத்திரியிலும் கிழமை நாட்களில் பல்கலைக்கழகத்திலும் கடமையாற்றுகின்றேன்.

கே: ஏன் தொடர்ந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் கடமை செய்யவில்லை?

ப: எனக்கு கூடியளவு வேலை இரவு நேரத்தில் கொடுக்கப்பட்டது அதனால் பிள்ளைகளைச் சரிவர கவனிக்கமுடியாத நிலை ஏற்பட்டது அதனால் அதனை விரும்பாது பல்கலைக்கழகத்தில் கடமை

புரிய விரும்பினேன்

கே: உங்கள் வைத்திய சேவையை மேலும் விருத்திசெய்ய ஆவலுண்டா?

ப: விருப்பமுண்டு.

பெண்கள் தொழிலுக்குச் செல்வதால் விளையும் சாதகமும் பாதகமும்.

குடும்பப் பெண்கள் தொழிக்குச் செல்வதால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்- வேலைப்பளுவினால் ஏற்படும் சிக்கல்கள் - பலப்பல.

உழைத்துச் சம்பாதித்துக்கொண்டு குடும்பத்தை நிர்வகிப்பதில் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை அவர்களிடமே கேட்டோம். அவர்கள்கூறும் கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

இந்த வாரம் டாக்டர் பெண்மணி ஒருவரினதும், ஆசிரியை ஒருவரினதும் கருத்துகளைத் தருகின்றோம்.

ஆனால் பிள்ளைகளைவிட்டு கூடியளவு நேரம்பிரிந்திருக்கவேண்டுமே! அதனால் பாசம் குறைவதுடன் அவர்களின் தேவைகளையும் கவனிக்கமுடி

(7ஆம் பக்கம் பார்க்க)

# புரிந்துணர்வுடன் செயற்படின்

## குடும்பத்தில் சிக்கல் இல்லை!

— ஆசிரியையின் கருத்து

திருநெல்வேலியில் கல்வி கற்றவரும் மூன்று பிள்ளைகளின் தாயாரும் தற்போது திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் கற்பிப்பவருமான திருமதி சி. சிவராசா அவர்கள் தமது அனுபவத்தையும் கருத்தையும் கூறுகிறார்.

கேள்வி;- பெண்கள் உத்தியோகம் பார்ப்பதால் குடும்பப்பராமரிப்பு குடும்ப வளர்ச்சியில் பாதிப்புண்டா?

பதில்;- சரியாகச் செயற்பட்டால் பாதிப்பில்லை என்றே கூற வேண்டும்.

கே:- எப்படி?

ப:- பெண்களின் சேவை வீட்டிற்கும், நாட்டிற்கும் வளர்ச்சி அளிக்கின்றது சேவையினால் கிடைக்கும் அறிவு வளர்ச்சி பொறுமையாக வேலை செய்ய வழிவகுக்கின்றது

பெண்கள் வெளியில் வேலை செய்வதால் வீட்டில் நல்ல செய்கைகளைச் செயற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. பலருடன் பழக வாய்ப்பு ஏற்படுகிறது. எல்லோருடனும் அன்பாக இருக்க முடிகின்றது

கே:- எத்தனை வருடமாக ஆசிரியத் தொழில் புரிந்து வருகின்றீர்கள்?

ப:- 34 வருடங்களாக திருகோணமலையிலும் யாழ் மாவட்டத்திலும் சேவை செய்து வந்திருக்கின்றேன்.

கே:- தொழிலின் போது ஏற்படும் பிரச்சினைகள் உங்கள் குடும்பத்தினைப் பாதிக்கச் செய்யுமா?



ப:- இல்லை. திட்டமிட்ட முறையில் செயற்படுவதால் சுறுசுறுப்பாக இருக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. இது குடும்பத்தைப் பாதிக்காது. பொறுமை பெண்ணும் குடும்பத்தின் செயற்பாட்டில் என்னுடன் ஏனைய அங்கத்தவர்களும் பங்குபற்றுகின்றனர். அதனால் அதிக சிக்கல் ஏற்படுவதில்லை.

கே:- ஆசிரிய வேலையுடன் வேறு ஏதாவது சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றீர்களா?

ப: இல்லை. இதுவரை சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அத்துடன் பாடசாலை முடிந்து வீடு வந்ததும் வீட்டு வேலைகளில் பொழுது போய்விடுகிறது

கே:- ஓய்வின்போது வேறு ஏதாவது செய்து வருகின்றீர்களா?

ப:- ஆம். தையல் வேலை, கோழிவளர்ப்பு, ஆடு மாடு வளர்ப்பு போன்றன செய்து வருகின்றேன்.

பேட்டி: இ. சுலோசனா

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பர். இத்தொழில் சிறந்தது எத்தனையோ விளக்குகளை ஏற்றக்கூடியதாக- எத்தனையோ பிஞ்சு உள்ளங்களைக் கவரக் கூடியதாக - சிறந்ததாக - இத்தொழிலைக் கருதுகின்றேன்

கே;- தொழிலின் நடைபணி பவளல்லவா பெண்?

கே:- தொழிலுக்குச் செல்லும் உங்களுக்கு பிள்ளைகளின் வளர்ப்பில் கவனமெடுக்கவும் அவர்களின் தேவைகளைக் கவனிக்கவும் நேரம் இல்லையே என்ற நிலைப்பாடு ஏற்படுகின்றதா?

ப:- இல்லை. எனது

கே;- பெண்கள் உத்தியோகம் போவதால் பிள்ளைகளின் பாசத்தை இழந்து விடுவதாக சில பெண்மணிகள் நினைக்கிறார்கள். அது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

ப;- எனது குடும்பத்தைப் பொறுத்தவரை எனது கணவர், பிள்ளைகள் எல்லோரும் புரிந்

(7ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்ரவேலிய மொஸாட், அமெரிக்க சி. ஐ. ஏ.

# இரண்டினதும் தத்துப்பிள்ளை இலங்கை!

## இரு பிரிவினரும் இணைந்து இங்கு 'கிறீன் அறோ' திட்டம்

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதில் இந்திய அரசு கடுமையாக உழைத்து வருகின்றது.

இந்த நிலையில் இப்பிரச்சினையில் நேரடியாக நடுநிலைமையாளர் என்ற போர்வையில் அமெரிக்கா தலையிடும் அறிகுறிகள் தென்படுகின்றன.

இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத தமிழ் பேசும் பகுதிகளில் சைப்பிரஸ் மாதிரியான தீர்வு ஒன்றையே கொழும்பில் உள்ள அமெரிக்க ராஜதந்திரிகள் கொழும்பு அரசிடம் வற்புறுத்தி வருகின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அரசியல் தீர்வு ஒன்றையே அமெரிக்காவும் விரும்புகிறது ஆனால் அத்தீர்வு தனது நலன்களை முன்னெடுத்துச் செல்வதாக அமைய வேண்டும் என்பதே தம்.

இந்தியாவின் நல் லெண்ணத்தைப் பயன்படுத்தி உருவாகும் தீர்வை அமெரிக்கா விரும்பவில்லை.

"இலங்கை அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையேயான ஏதாவது ஒரு பிரச்சினைக்கு இந்திய உதவியுடன் தீர்வு காணப்படும் சூழ்நிலை பேச்சுவார்த்தைகளின் போது ஏற்படும் வாய்ப்பு உருவாவதை, இலங்கை அரசின் சார்பில் பாழடித்து வருகின்றன. புதுடில்லி அரசு அதிகாரிகளின் சந்தேகம் இது."

டிசம்பர் 19 யோசனை அம்பாறை சிங்களப் பகுதிகளைப் பிரித்து வடமத்திய மாகாணத்துடன் இணைப்பது. அதன் பின்னர் உருவாகும் புதிய கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் ஸ்தாபன ரீதியில் இணைப்பது.

—இதுதான் டிசம்பர் 19 இன் ... கொண்ட போசனை.

அமெரிக்க சார்பான இலங்கை அரசக் குழு

இலங்கையை சி ஐ. ஏ. யும் மொஸாட்டும் பொறுப்பு எடுத்துக்கொண்டுள்ளன.

இப்படி இந்திய ஆங்கில சஞ்சிகையான 'பிளிட்ஸ்' ... தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது

டது.

இந்திய மத்தியஸ்தத்தைத் தவிர்த்து தனது மத்தியஸ்தம் மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் அமெரிக்கா நம்பிக்கை வைத்துச் செயலாற்றி வருகிறது.

இந்த அடிப்படையில் ... இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ... கொண்டு பேச முயற்சித்தது.

கொண்டு பேசுவதன் மூலம் இந்தியாவை மத்தியஸ்தத்தில் இருந்து அகற்றுவதும் இலங்கையின் திட்டம்

அதன் பின்னர் பாக்கு நீரிணை ஊடாக தமிழ் நாட்டில் சதி முயற்சிகளை மேற்கொள்வதும் என்பது அமெரிக்காவின் திட்டம் - இப்படி இங்குள்ள அதிகார வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன

தமிழ்நாட்டு

சமீபத்தில் தமிழ்நாட்டில் தமிழ்நாட்டு கண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன இச் சம்பவங்கள் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மொஸாட் பயிற்சி பெற்ற உளவாளிகள் தான் இச்சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அரசு வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

இரண்டு வருடங்களாக ...

வருகிறது.

இலங்கைக்கு அமெரிக்க உதவி

அமெரிக்காவின் தீவிரவாத எதிர்ப்பு உதவித் திட்டத்தின் கீழ் இராணுவ உதவி பெற கடந்த செப்டம்பரில் இலங்கை தகுதி பெற்றது.

இது கொழும்புக்கும் வாஷிங்டனுக்கும் இடையேயான நெருங்கிய உறவை எடுத்துக் காட்டுகிறது.

கொழும்பு அரசின் நாளாந்த பாதுகாப்புச் செலவீனம் 10 லட்சம் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது.

ஏற்றுமதி குறைந்ததினால் இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி வருமானம் குறைந்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் பாதுகாப்புக்குத் தேவையான நிதி எப்படிக் கிடைக்கிறது?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பரீட்சை எடுக்காத பண்டிதர்கள் மிகப்பெரும் தொண்டுகள் புரிந்தனர்

பண்டிதமணி அவர்கள் தம்மை உருவாக்கிய உத்தமர் இருவரை இரண்டு மனிதர்கள் என்று பலமுறை பாராட்டி எழுதியுள்ளார். அவர்கள் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களும், நல்லூர் த. கைலாசபிள்ளை அவர்களுமாவர். அவர்களை இவர் புலவர் ஐயா என்றும், மனேச்சர் ஐயா என்றும் மதிப்புடன் போற்றுவர்.

**புலவர் தொண்டு**

யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் பரீட்சை எடுக்காத பண்டிதர்கள் பெரும் புலவர்களாய்ச் செந்தமிழ் வடமொழி வளரத் தொண்டுபுரிந்து வந்தார்கள்.

சுன்னாகம் நாகநாத பண்டிதர், முருகேச பண்டிதர் இருவரும் வடமொழி, தென்மொழி கரைகண்டவர்கள். அவர்களுக்குப்பின் கந்தமடம் சுவாமிநாத பண்டிதர், தென்கோவை வித்தகம் கந்தையா பண்டிதர் என்னும் இருவரும் புகழ் பூத்த அறிவாளிகளாவர்.

அவர்களுடைய பதிப்பு தமிழ்மொழி வரலாற்றுக்குப் பொதுவாகவும், சைவசமய வரலாற்றுக்குச் சிறப்பாகவும் உபகரிக்கப் பெற்றனவாகும்.

வித்தகம் கந்தையா பிள்ளை வெள்ளைக்கார அரசாங்கமறியத் தமிழ் வளர்த்தவர். சமகாலச் சான்றோரின் பாணியில் பாடல்கள் யாத்தவர். சைவத் துறையில் வித்தகம் என்னும் பத்திரிகை நடத்தியவர்.

பாண்டிச் சேரியில் ஞானியார் ஒருவரின் அன்புக்குப் பாத்திரரானவர் நாவலர் பாரம்பரியத்தில் ஊறநனைந்தவர். சிற் கைலாசபிள்ளை என்பாரின் சிறந்த மாணாக்கர். கொழும்பில் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராயிருந்தவர்.

பண்டிதமணி அவர்களின் வளர்ச்சியில் கருத்தாயிருந்தவர்.

மற்றவர் கந்தமடத்து நாகர் சின்னத்தம்பி என்பாரின் மைந்தன் சுவாமிநாத பண்டிதர் எனப் பெயரெடுத்தவர். மாவில் தம்பையா உபாத்தியாயர் என வழங்கியவர். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களிடத்தும் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அவர்களிடத்தும் முறையாகத் தமிழ் பயின்றவர். அவரின் படிப்பாழம், சைவப் பிரசங்கஞ் செய்யும் ஆற்றல், குற்றங் கண்டவிடத்துக் கண்டிக்கும் ஆற்றல், புத்தக வெளியீட்டு நுட்பம் என்பன உச்சமானவையாயிருந்தன.

## பண்டிதமணி வரலாறும் காலமும்

**சின்னத்தம்பியார் வீடு**

கந்தமடத்தில் வைரவநாதர் சின்னத்தம்பி என்பார் பெரிய சுருட்டு முதலாளி. சின்னத்தம்பியார் வீடு என்று புகழ் பெற்ற பெரிய மாளிகை 1850 ஆம் ஆண்டளவில் கட்டப்பெற்றது. அவரின் அருமைத்தம்பியார் ஆறுமுகத்தாபிள்ளை என்னும் முகத்தார், நாவலர் அவர்களை வீழ்ந்து வணங்கி, அவர் கட்டளைகளை நியமமாக நிறைவேற்றுபவர். நாவலர் அவர்களின் நூல்களை அச்சிடுவதற்காக நீராவியடியில் சைவப் பிரகாச இயந்திரசாலை அமைத்தவர். நாவலரவர்கள் திருத்திக் கொடுத்தவண்ணம் கந்தபுராணத்தை 1883 ஆம் ஆண்டில் திருத்தப் பதிப்பாக வெளியிட்டவர்.

நாவலர் நல்லூரில் திருப்பணி வேலை செய்வதற்குக் கருவூரிலிருந்து கருங்கற்கள் எடுப்பித்த போது அந்தக் கைங்கரியத்தைக் கருத்தோடு செய்து முடித்ததோடு, திருமஞ்சனக்கிணறும் தோண்டிக்கொடுத்தவர்.

கந்தமடத்தில் சின்னத்தம்பியாரின் மைந்தன் சிவகுருநாதனுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பதற்கு வித்துவசிரோமணி வருவது வழக்கம். வீட்டில் கம்பளம் விரித்துத் தலையணைகள், விசிறிகள், தண்ணீர்க் கூசா, வெற்றிலைத் தட்டம், பணிக்கம், பணியாளர் முதலான வசதிகள் எல்லாம் இருந்தன. கந்தமடத்து வேதாந்த மடம் சிவகுருநாதன் பெயரால் அமைந்ததேயாகும்.

செல்லப்பிள்ளை சிவகுருநாதனுக்குப் பாடஞ் சொன்ன வித்துவசிரோமணி அவர்களுக்குச் சிரமமில்லாமல் உடன் இருந்து கேட்பதற்கு இன்னும் இருவர் வந்து போவது வழக்கம்.

முன்னர் கழகத்தைத் தம்பிரான் சுவாமிகள் வைத்திலிங்கஞ் செட்டியாருக்குப் பாடஞ் சொன்னபோது மயில்வாகனப்புலவர், சேனாதிராய முதலியார் முதலானோர் உடனிருந்து கேட்டவண்ணம் சிவகுருநாதனோடு உடனிருந்து கேட்டவர்கள். இருவரும் கந்தமட வைரவரேயாவர்.

ஒருவர் கதிரவேலு பிள்ளையா இவர் சிவகுருநாதனின் மைத்துனரும் அயலவருமாவர். மற்றவர் சின்னத்தம்பி சுவாமிநாதன் என்னும் அயலவராவர். இவர்கள் மூவருள் சுவாமிநாதன் அறிவுக்கூர்மையுடையவர்.

இவரின் படிப்பார்வம் வித்துவசிரோமணி அவர்களை வெகுவாக உருக்கி விட்டது. அவர் இவருக்குக் கண்ணும் கருத்துமாய்ச் சொல்லிக் கொடுத்த காலத்தில், அவர் திருமறைக் காட்டுக்கு யாத்திரை சென்ற வேளையில் இங்கே பாடஞ் சொல்லிக்கொடுப்பதற்கு உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அவர்களை நியமித்தவர். சிவசம்புப் புலவரும் வியக்கும்வண்ணம் சுவாமிநாதர் படித்து வந்தார்.

**மனமுருகி பாராட்டு**

குருவுக்குப் பணிவிடை செய்வதிலும் குருவைப் பராமரித்தலிலும் சுவாமிநாதரின் பணி புனிதமாயமைந்ததமை கண்டு புலவர் அவர்களே மனமுருகி இவரைப் பாராட்டியுள்ளார்.

அவர் பாராட்டிய பாடல்கள் தமிழ்நாட்டுத் திருநெல்வேலி சைவசித்

**க. சி. குலரத்தினம்**

தாந்த நூற்பதிப்புக்கழகத்தார் பதித்த தனிப்பாடற்றிரட்டு மூன்றும் பாகத்தில் வெளிவந்துள்ளன. அவற்றுள் இரண்டு பாக்களையாவது சுவைத்தல் நன்றாகும்.

'யாரும் ஏற்பவர் இன்மையின்
மூப்பினில் யான் பிணியும்
ஈரும் கொடிய மிடியும்
அட உள்விளை பொழுதில்
சாரும் புகழ்ப்பண்டிதன் சாமி
நாத நயாநிதியைக்
கூரும் சுடரயில் வேலோன்
திருவருள் கூட்டியதே'

அக்காலத்தில் நாட்டார்கள் என்றும் நகரத்தார் என்றும் வழங்கிய செட்டிமார் காங்கேயன் துறைமுதல் காலிவரையிலும் சைவத் தமிழ் வளர்த்தவாறே வணிகஞ் செய்தவர்கள்.

அவர்கள் புலவர்களை ஆதரிப்பதில் பெருமை வாய்ந்தவர்கள். காலியில் வாழ்ந்த தனவைசியர்கள் வித்துவசிரோமணி அவர்களை அங்கு அழைத்துப் பேசுவிப்பதற்கு விரும்பியபோது, அவர் தம் மாணாக்கன் சுவாமிநாதனைத் தமக்குப் பதிலாக அனுப்பினார். சுவாமிநாத பண்டிதரின் பேச்சைக் கேட்டுப் பேருவகை எய்திய செட்டிமார் அச்செய்தியைத் தமிழ்நாட்டினருக்கு அறிவித்ததும் அவர்கள்—

"ஆளை இங்கே அனுப்புக" என்று ஆவலோடு எழுதினார்களாக, இவரும் அங்கே சென்று பல திருக்கோயில்களிலும் பேசினாராக, அவர்கள் பல்லாயிரம் வெண்பொற்காசுகளை அள்ளிக்கொடுத்தாராக, இவர் அவற்றை ஏற்க மறுத்து அவர்கள் வேண்டியவாறு சைவப்பணி புரிதற்கு விரும்பி, திருச்செந்தூரிற் பால சுப்பிரமணிய வித்தியாசாலையையும் சிதம்பரத்தில் அறுபத்து மூவர் வித்தியாசாலையும் நிறுவினர் என்ப.

**ஆதீனங்கள் கௌரவம்**

தமிழ் நாடெங்கும் பெரும்புகழ் பெற்ற சுவாமிநாத பண்டிதர் அவர்களை ஆதீனங்கள் வெகுவாகக் கௌரவித்தன. திருவாவடுதுறை யாதீன மகாசந்நிதானம் பொன் கொண்டிழைத்த உருத்திராக்க மாலையைக் கழற்றி இவர் கழுத்தில் தாமே தம் திருக்கரத்தால் அணிந்தபோது, சம்பிரதாயம் கருதிப் பணிவோடு ஏற்றுப்பின், உள்ளமுருக்கும் வகையில் பாடல்கள் பாடி அதனைத் திருப்பிக் கொடுத்துவந்த அவர் பெருமை தனிப்பாடல் திரட்டில் பேசப் பெற்றுள்ளது.

அவர் சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் மீண்ட செய்தியைச் சிவசம்புப் புலவர் உவகையோடு பாடிய பாடல்களுள் ஒன்றையாவது ஈண்டுச் சுவைத்தல் பொருத்தமானதாகும்.

'வற்று அருட்பண்டிதன் சாமி
நாதன் வளச் சென்னை நின்று
உற்றான் இவண் என யாழ்ப்பாணத் (து)
ஊர்முற்றும் ஓகைதழீஇ
நற்றுரை வான் முகில் கண்ட
மயிலியல் நண்ணியிடில்
பெற்றுருந் தவ்வையும் உற்ற
களிப்பெவர் பேசுவரே.'

இவ்வாறெல்லாம் பாடிய புலவர், அவரை, 'ஆத்தர்கள் சிகாமணி, நயிட்டிகப் பிரமசாரி, அத்தனைக்கொரு கட்டளை, அனைவரும் மதித்த சின்னத்தம்பி ஈட்டிய நல்லரிய தவசித்துமுனை, அமலபரமுத்திநிலை தேற்றிடும் செய்ய சித்தாந்த சாகரம், நம்பினோர் ஆறி எப்பொழுதினும் வடதாரு, அளவிலாச் சுகுண மேருவே என்றெல்லாம் பாடியுள்ளார்.

சுவாமிநாத பண்டிதர் அவர்கள் தமக்குப் பிறப்புரிமையாற் கிடைத்த பெருஞ் செல்வத்தைக் கொண்டு புலவர்களை ஆதரித்தவகையில், குப்பிழான் செந்திநாதஐயரவர்களின் நூல்கள், ஏடுகள் யாவற்றையும் விலை கொடுத்துவாங்கி, வளர்த்துவந்த பண்டிதமணி அவர்களிடம் உவகையோடு கொடுத்து, 'நீ இவற்றை உன் விருப்பம் போல எவருக்கும் பயன்படுத்து' என்றார்.

சுவாமிநாத பண்டிதர் தமிழ் நாட்டில் சைவ வித்தியாபானு அச்சகம் நிறுவிச் சைவத் தமிழ் நூல்களை வெளியிட்டதோடு, மூவர் தேவாரப் பதிகங்களைத் தலமுறை தவறாது கோவைசெய்து தக்க முன்னுரையோடு அடங்கன் முறையென முதலில் வெளியிட்டவர். வீட்டில் செவிடராகிய தந்தையாருடன் இளமையில் உரத்துப் பேசிப் பழகிய விசேடத்தால் அவர் திருக்கோயில்களில் ஆயிரக்கணக்கானோர் கேட்கும் வகையில் உரத்துப் பேசுவதிலும், சைவசமயத்தில் குற்றஞ் சொன்னவரை இரக்கமின்றிக் கண்டிப்பதிலும் வல்லவர். சுவாமிநாத பண்டிதர் அவர்கள் வழியில் நைட்டிகப் பிரமசாரியாக வளர்ந்து வந்தவர் பண்டிதமணி அவர்கள். —(தொடரும்)

# பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

## செய்தி சுவைத்ததா? உணவு சுவைத்ததா?

தந்தி மூலம் செய்தி அனுப்பும் முறை கண்டுபிடிக்கப்படாத காலம். ஒரு பத்திரிகை ஆசிரியர் தனது செய்தியாளரிடம் பின்வருமாறு தெரிவித்தார்.

பிரான்சில் அரசர் இன்று உரை நிகழ்த்தப் போகிறார். அதைக் குறிப்பெடுத்து, இதோ இந்த இரண்டு புறாக்களின் மூலம் உடனுக்குடன் செய்தி அனுப்புங்கள் என்று உத்தரவு பிறப்பித்தார்.

நிருபர் புறாக்களுடன் பிரான்சுக்குப் பயணமானார். நிருபர் உணவுக்காக ஒரு பெரிய ஹோட்டலுக்குச் சென்றார். வாயிலில் நின்ற வாயில் காப்போனிடம் இரு புறாக்களையும் கொடுத்தார்.

பின்னர் சாப்பாடு கொண்டுவரச் சொல் என்று சொல்லிவிட்டுத் தனியான அறை ஒன்றுக்குச் சென்றார்.

சிறிது நேரம் கழித்துச் சாப்பாடு வந்தது. அதன் தனிச்சுவையை ருசித்து ரசித்து உண்டார் நிருபர். பணத்தைக் கொடுத்து விட்டு ஹோட்டலை விட்டுக் கிளம்புகையில், சேவகனை அழைத்துப் புறாக்களைக் கொண்டு வருமாறு சொன்னார்.

என்ன புறாவா! நீங்கள் இப்பொழுது தானே சாப்பிட்டீர்கள். மறந்து விட்டீர்களா? சேவகன் நிருபரை நோக்கியவாறு பதிலுரைத்தான். ★

## மன்னரையே உதைத்தவர்

தன்னிடம் வைத்தியம் நாடி வருபவர்களை உதைத்துக் குணப்படுத்துகிறார் இந்திய டாக்டர் அன்வாரி.

ஆயுர்வேத டாக்டரான இவர் உதைத்தபின் சில மருந்துகளையும் கொடுக்கின்றார். மூட்டுவலி, இரத்தக்கட்டு நோய், ஆகியவற்றை இப்படிச் சரி செய்கிறார்.

இவரிடம் இவ்வாறு உதைபட்டு வைத்தியம் செய்து கொண்டவர்களில் ஒருவர் பூட்டான் மன்னர். ★

## சொட்டுச் சொட்டாகத் தண்டனை

தண்டனை அளிப்பதில் பல முறைகள் இருக்கின்றன.

சர்வாதிகாரி ஹிட்லர் கைதிகளிடமிருந்தும் ஒற்றர்களிடமிருந்தும் உண்மையை வரவழைக்க நூதனத் தண்டனையைக் கொடுத்து வந்தார்.

அவர்களது கைகளையும் கால்களையும் கட்டி தண்ணீர்ப் பைப்பிலிருந்து நீர் உச்சந்தலை மீது சொட்டுச் சொட்டாக விழுமாறு செய்யப்படும்.

இது சாதாரண தண்டனை என்று நினைக்கின்றீர்களா? இல்லை. மரண தண்டனையை விடக் கொடியது. ஏனெனில் தண்ணீர் சொட்டுச் சொட்டாக உச்சந்தலையில் விழுந்து கொண்டிருந்தால் கடைசியில் சம்மட்டியால் அடிப்பது போலாகி விடும். அதைப் பொறுக்க முடியாது கைதிகள் பைத்தியக்காரர்கள் போலாகி விடுவார்கள்.

அதன் பின் எவ்வளவு முக்கிய இரகசியத்தையும் கறந்து விடலாம்.

## பாப்புலர் புலவர்

அவர் புகழ் பூத்த தனித்தமிழ் அறிஞர்.

அவருக்கு பட்டம் அளித்துக் கௌரவிக்க விரும்பியவர்கள் ஒரு புதுமையையும் கடைப்பிடிக்க விரும்பினார்கள்.

அதற்கென விழாவன்று பிரமுகர் ஒருவர் மூலம் அவருக்கு பாப்புலர் புலவர் என்ற பட்டத்தை அளித்தனர்.

ஆத்திரத்தாலும் அவசரத்தாலும் அறிஞர் முகம் சிவந்தது.

பிறமொழி சொற்கள் கலந்து என்னிடம் பேசக் கூட முடியாது. அப்படியிருக்க ஆங்கிலச் சொல்லால் எனக்குப் பட்டம் அளிக்கிறீர்களே... இது வினைப்பகையா? என கூச்சலிட்டு ஆரவாரம் செய்தார்.

உடனே அந்தப் பிரமுகர் எழுந்து பணிவுடன், இது வினைப்பகையல்ல... வினைத்தொகை என்றார்!

இப்பொழுதெல்லாம் பாட்டு எழுதத் தெரியாத புலவர்களே அதிகம் உள்ளனர்.

தாங்கள் அப்படியல்லவே! தங்களிடமிருந்து பாட்டு என்கின்ற அதிர இருக்கின்றதே அதனால்தான் தங்களுக்கு பா(பாட்டு) + புலர் = பாப்புலர் என்கின்ற தனித்தமிழ் சொல்லோடு பட்டம் வழங்கி கௌரவித்தோம் என விளக்கினார்.

அறிஞர் அகமகிழ்ந்தார்! ★

## வெள்ளை மாளிகை எப்படி வந்தது?

அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம் வெள்ளை மாளிகை என்று அழைக்கப்படுகிறது. அதற்கு இப் பெயர் வந்த காரணம் தெரியுமா?

1814 ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க-பிரிட்டன் யுத்தத்தில் பிரிட்டன் இம்மாளிகை மீது குண்டு வீசியது.

இதனால் மாளிகை தீப்பிடித்துக் கொண்டதால் அதன் சுவர்கள் கருகி கறுப்பு நிறமாகி விட்டன.

அந்த நிறத்தை மாற்றுவதற்காக வெள்ளை பெயின்ட் அடித்தார்கள்.

அன்று முதல் வெள்ளை மாளிகை என அழைக்

## அமெரிக்கர்களை உலுக்கும் 'எய்ட்ஸ்'

பாலியல் விஷயத்தில் சர்வ சுதந்திரத்தை அனுபவித்து வந்த அமெரிக்கர்கள் வாழ்வில் இந்த எய்ட்ஸ் (AIDS) நுழைந்து கொண்டு இப்போது அவர்களைப் படாதபாடு படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறது!

படுக்கையறைப் பக்கம் போகவே இப்போது அவர்கள் மிகவும் பயப்படுகிறார்களாம்!

எப்போது என்ன நடக்குமோ என்ற அச்சம் அவர்களைக் கடுமையாகவே வாட்டி எடுக்கின்றது.

புற்றுநோய் போல் இங்கு சுதந்திரமாகப் பரவி வரும் இந்த வியாதி இளைஞர்கள் முதல் முதியவர்கள்வரை எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கி வருகிறது.

காதலிகள்கூட தங்கள் உடல் பாதுகாப்புக்காக தங்களது காதலர்களிடம் உங்களுக்கு?......... இப்படி மறைமுகமாகக் கேட்டறிந்து கொள்வதில் பெரும் ஆர்வத்தைக் காட்டி வருவதால் காதலன்மார் ஓரளவு கஷ்டத்தை அனுபவித்தே வருகின்றார்களாம்.

பிரபல ஹொலிவூட் கவர்ச்சி நடிகைகள்கூட தம்முடன் நடிக்க வரும் ஆண் நடிகர்களுக்கு இந்த நோய் இருக்கிறதா? என்று பரிசோதனை நடத்திய பின்னரே இணைந்து நடிக்க சம்மதம் தெரிவிக்கும் நிலை இங்கு ஏற்பட்டு விட்டதாம்.

'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நமது நாட்டு கலாசார வாழ்வுதான் அமெரிக்கர்களை இந்த படு அபாயகரமான நோயிலிருந்து காப்பாற்றும் என்ற கருத்து அங்கு வைத்தியர்களின் ஆலோசனையாகப் பரவி வருகிறது.

சுதந்திரமாக உடலின்பம் துய்த்து வந்த அமெரிக்கர்களை இந்த எய்ட்ஸ் வியாதி இப்போது ஒரு தரத்துத்தரத்தி படுக்கை அறைப்பக்கம் போகாமல் செய்து கொண்டிருக்கிறது. விதி யாரை விட்டது! ★

## காதலித்துத் திருமணம்

தைவான் நாட்டு இளைஞர் ஒருவர் தாம் விரும்பும் ஒரு பெண்ணுக்கு தினமும் காதல் கடிதம் எழுதினார். எண்ணிக்கை 700 இருக்கும்.

சுமார் இருவருடத்தின் பின் அவர் காதல் கொண்ட பெண் மணம் செய்து கொள்ள முன் வந்தாள்.

யாரைத் தெரியுமா? அக்கடிதங்களையும் ஒவ்வொருநாளும் விநியோகம் செய்து வந்த தபால்காரரை

## பெயருக்கு முன்னால்

ஸ்பானியர்கள் தங்கள் தாயாரின் முதல் எழுத்தையே தங்களின் பெயருக்கு முன்னால் இனிஷியலாகப் பயன்படுத்துகின்றார்கள்.

★ ★ ★

## முதலைக் கண்ணீர்

தம்மாலான காரியத்தை செய்து விட்டு பின்னர் அது நடந்ததிற்குப் போலியாக வருந்துபவர்களை முதலைக்கண்ணீர் வடிக்கின்றார்கள் என்று கூறுவது வழமை.

முதலையானது இரையை விழுங்கிய பின்பு அதன் கண்களின் ஓரமாக நீர் வழிகின்றது.

செய்வதையும் செய்து விட்டுப் போலியாகக் கண்ணீர் வடிக்கின்றதே!

இது முதலைக்கண்ணீர் ஆனால் உண்மை என்ன தெரியுமா?

முதலை இரையை உண்ணும்போது இரையிலும் தண்ணீரிலும் உள்ள உப்புக்கள் முதலையின் உடலுக்கு மேலதிகமாகும்போது கண்களின் அருகில் உள்ள உப்புச் சுரப்பி மூலமும் நீருடன் வெளியேறுகிறது. இது முதலை கண்ணீர் வடிப்பது போல அமைந்து விடுகிறது.

## பயபக்தி பெற்ற பரிசு

ஓர் ஊரில் ஓர் ஏழைச்சிறுவன் இருந்தான். அவன் பிள்ளையாரில் அதிக நம்பிக்கை உடையவன்.

அவனுக்குத் தாயும் இல்லை. தகப்பனும் இல்லை. அவன் பசியால் வாடினான். ஒருநாள் அவன் காட்டுப்பாதையால் செல்லும்போது ஒரு பழ வியாபாரியைக் கண்டான். உடனே அந்தச் சிறுவன் 'ஐயா! இந்த ஏழைக்கு ஒரு பழம் தாருங்களேன்' என்று கெஞ்சிக் கேட்டான். ஆனால் வியாபாரி பழத்தைக் கொடாது பேசி விட்டுப் போய் விட்டான்.

அதன் பின் அந்த ஏழைச் சிறுவன் சிறிது தூரம் போனான் அங்கே ஒரு சிறு பாழடைந்த பிள்ளையார் கோவில் இருந்தது. உள்ளே போய்ப் பார்த்தான். அங்கே ஒரு மட்டையில் இந்தக் கோயிலைச் சுத்தப்படுத்துவோருக்கு எல்லா நன்மைகளும் வரும் என்று எழுதியிருந்தது.

சிறிதும் தயங்காமல் அந்த வேலையை செய்யத் தொடங்கினான். பிள்ளையார் சந்தோஷப்பட்டார். மனமிரங்கினார். அந்த ஏழைச் சிறுவனின் பக்தியைக் கண்டார். மகிழ்ச்சியடைந்தார். இவனைச் சோதிக்க நினைத்தார்.

அவர் என்ன செய்தார் தெரியுமா? யானை ஒன்றை அனுப்பினார். யானை ஒரு பெரும் மரத்தை முறித்துக் கொண்டு வந்தது.

அதைக் கண்டு சிறுவன் பயப்படவில்லை.

'பிள்ளையாரே' என்று கத்திக்கொண்டு பிள்ளையார் சிலையைக் கட்டிப் பிடித்தான். பின்பு யானையைக் காணவில்லை. அப்பொழுது அவன் மெதுவாக எழும்பி தொடர்ந்தும் வேலையை செய்யத் தொடங்கினான்.

சுத்தப்படுத்திய பின் பக்கத்தில் ஒரு செம்பு இருந்தது. பக்கத்து ஆற்றுக்குச் சென்றான் தண்ணீரை அள்ளி, அள்ளிக் கழுவினான். கழுவிய பின்பு மலர்கள் [...] வணங்கினான்.

பிள்ளையாரே! நீங்கள் எனக்கு ஒரு வழி காட்ட வேணும் என்று வேண்டினான்.

திடீரெனக் கோயிலுக்குள் இருந்து ஒரு குரல் கேட்டது. நீ நல்லவன் நீ ஓர் ஏழை என்றாலும் நீ தயங்காமல் இந்த வேலையைச் செய்து விட்டாய் நீ உண்மையான பக்தன். நீ போய் வா" என்று அக்குரல் தெரிவித்தது. பின்பும் பிள்ளையாரை வணங்கி விட்டு ஆலயத்திலிருந்து வெளியே வந்தான்.

அங்கே! பெரும் பண மூடை ஒன்று இருந்தது அதை அவன் எடுத்து அந்தக் கோயிலை பெரும் கோயிலாக்கினான் கும்பாபிஷேகமும் செய்வித்தான்.

தனக்கும் கொஞ்சக் காசை எடுத்து ஒரு வீடு கட்டினான். தனக்கு செலவுக்கும் வைத்துக் கொண்டு மிச்சத்தை ஏழைகளுக்கும் அன்னதானத்துக்கும் கொடுத்தான். பின்பு அவன் செல்வந்தனாக இருந்தான். பிள்ளையாரை மட்டும் மறக்கவில்லை. அதனால் அவனுக்கு எந்தவித இடைஞ்சலும் வரவில்லை. ★

எம். எம். அபூபக்கர்
(மன்னார்)

## விடுகதைகள்

1. தண்ணீரில் ஓடிவரும் தத்துவப்பசு கரைமீது நடவாத வித்துவப்பசு.
2. தொந்தி வயிறன் சந்தையிலே குந்தி இருக்கிறான்.
3. நாலு காலுண்டு வீச வாலில்லை.
4. பட்டணத்து மொட்டைமரம் வெட்ட வெட்டத் தழைக்கிறது.
5. பட்டணம் கிட்ட இருந்தும் எட்டிப்பார்க்க இயலவில்லை.
6. முதுகிலே மூடை தூக்கி மூன்று மணிக்கொரு முழம் போவான்.
7. சின்னக் கூட்டில் சிக்கல் மக்கள் வேலை.
8. செம்பு நிறைய சிவப்புக்கற்கள்
9. சேற்றில் புரண்டு படுக்கும், நாற்றம் நரகலை நக்கும்.
10. தானே திறந்து தானே மூடும் கதவுகள்.

விடைகள்:
1. கப்பல்
2. பூசனிக்காய்
3. நாற்காலி
4. தலைமயிர்
5. முதுகு
6. நத்தை
7. மணிக்கூடு
8. மாதுளங்கனி
9. பன்றி
10. கண் இமைகள்.

செல்வி. க. கோமதி
(புன்னாலைக்கட்டுவன்/ வயாவிளான். ம. மா. வித்தியாலயம்)




## பூச்சிகள்

★ வண்ண வண்ணப் பூச்சிகளாம்
வண்ணத்துப் பூச்சிகளாம்
சின்னச் சின்ன மலர்களிலே
சிந்தும் தேனைக் குடித்திடுமாம்

★ சாலை ஓர மரங்களிலே
சாய்ந்து தொங்கும் மலர்களிலே
கண்ணைச் சிமிட்டி மதுகுடிக்கும்
கண்ணைக் கவரும் பூச்சிகளாம்.

★ வானுயர்ந்த சோலைகளில்
தேனும் நிறைந்த விருட்சங்களில்
தேடிவந்த தேன்மலரில்
பாடிநின்று மது குடிக்கும்.

★ நாடு தோறும் நிறைந்துள்ள
காடு மலைகள் தனிற் சென்று
கூட்டம் கூடி மது குடிக்கும்
காட்சி கண்டு மகிழ்ந்திடுவீர்.

-த. வி. இரகுநாதன்
10 ஆம் ஆண்டு (ஹாட்லிக் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்குள்ளேயே மூன்று வகைத் திருடர்கள்

## ஸ்ரீ இராமகிருஷ்ணர் சொன்ன கதை

சமயம்

ஒரு நாள் பணக்காரன் ஒருவன் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தான். அப்போது மூன்று வழிப்பறித் திருடர்கள் அவனை மடக்கிப்பிடித்துச் சூழ்ந்து கொண்டார்கள். அவன் வைத்திருந்த பொருள்களை அவர்கள் பறித்துக் கொண்டு விட்டார்கள்.

பிறகு அவர்களுள் ஒருவன் 'இவனை உயிருடன் விட்டு வைப்பதால் என்ன லாபம்?' என்று சொல்லிக் கொண்டே கத்தியை உருவிப் பணக்காரனை வெட்டப் போனான். அவன் அப்படிச் செய்வதை மற்றொருவன் தடுத்து நிறுத்தி, "வேண்டாம். இவனைக் கொல்வதனால் மட்டும் நமக்கு என்ன லாபம்? இவனுடைய கை கால்களைக் கட்டி, இங்கேயே போட்டு விட்டுப் போய் விடுவோம்' என்று சொன்னான்.

அப்படியே மூவரும் சேர்ந்து அவனுடைய கை கால்களை ஒரு கயிற்றால் இறுகக் கட்டினார்கள். பிறகு அவனைச் சாலையின் ஒதுக்குப்புறமாக இருந்த ஓர் இடத்தில் தூக்கி வீசிப்போட்டு விட்டுப்போய்விட்டனர்.

சிறிது நேரம் ஆயிற்று. மூன்றாவது திருடன் மீண்டும் அதே இடத்திற்குத் திரும்பி வந்தான். அவன் பணக்காரனிடம் 'ஆஹா, ஐயோ பாவம்! அப்பா உனக்கு வலிக்கிறதா? இரு நான் உன் கட்டுக்களை அவிழ்த்து விடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டே அவனுடைய கட்டுக்களை அவிழ்த்து விட்டான். பிறகு 'என்னுடன் வா நான் உனக்கு வழி காட்டுகிறேன்' என்று சொல்லிப் பணக்காரனை நெடுஞ்சாலை வரையிலும் வெகு தூரம் அழைத்துக் கொண்டு போனான்.

இருவரும் காட்டைக் கடந்து ஊருக்குள் புகும் சாலையை நெருங்கினார்கள்.

அப்போது திருடன் அவனிடம் 'இதோ இப்போது ராஜபாதை வந்து விட்டது. அதோ அந்த இடத்தில் உன் வீடு தெரிவதைப்பார் இதேபாதையில் நீ சென்றால் உன் வீட்டிற்கு விரைவில் போய்ச் சேர்ந்து விடுவாய்' என்று சொல்லிக் கையைக் காட்டினான்.

அப்போது அந்தப் பணக்காரன் திருடனிடம் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதற்காக 'ஐயா, நீங்கள் எனக்குப் பெரிய உபகாரத்தைச் செய்திருக்கிறீர்கள். நீங்களும் என்னுடன் என் வீட்டிற்கு வாருங்கள். எங்கள் வீட்டில் இருப்பவர்கள் தங்களைக் காணப் பெரிதும் மகிழ்ச்சி அடைவார்கள்'' என்று சொல்லித் தன் வீட்டிற்கு வரும்படி திருடனை அன்புடன் அழைத்தான்.

அதற்குத் திருடன் பதில் சொன்னான். 'அப்பா. நீ சொல்கிறபடி நான் செய்வதற்கில்லை. நான் அங்கே வரமாட்டேன். வரவும் கூடாது. அங்கு வரக்கூடிய தகுதி எனக்கு இல்லை. ஊருக்குள் வந்தால் பொலீஸ்காரர்கள் என்னைப் பிடித்துக் கொள்வார்கள்' என்று சொல்லி அவனை வழி அனுப்பி விட்டுப் பழையபடியே காட்டுக்குள் சென்று மறைந்து விட்டான்.

இந்த உலக வாழ்க்கை ஒரு காடு போன்றது. இந்தக் காட்டில் சத்துவ குணம், ரஜோகுணம் தமோகுணம் என்னும் மூன்று திருடர்கள் இருக்கிறார்கள். ஜீவாத்மாவாகிய மனிதன் காட்டு வழியே வழிப்போக்கனைப் போகிறான். அவனிடம் புனிதம் நிறைந்த ஆத்மஞானம் என்னும் விலையுயர்ந்த பொருள் இருக்கிறது. அதை மூன்று திருடர்களாகிய முக்குணங்கள் பறித்துக் கொண்டு வழிப்பறி செய்கிறார்கள். தமோகுணம் தான் முதலாவது திருடன். அது அவனை ஒரேயடியாக அழித்துவிட முயற்சி செய்கின்றது. ரஜோகுணம் ஒருவனை லௌகிகத்தில் பிணைக்கிறது. ஆதலால் ஒருவன் பலவித ஆசைகளுடன் கூடிய பல முயற்சிகளில் ஈடுபடுகிறான், அது பந்தங்களாகிய சங்கிலியால் அவனைக் கட்டுப்படுத்துகிறது. இறைவனை மறக்கும் படியும் செய்கிறது.

இந்த மூன்று திருடர்களும் நமக்குள்ளேயே இருக்கிறார்கள்.

சத்துவகுணம் உலக பந்தங்களிலிருந்தும், ரஜோ - தமோ குணங்களின் கொடுமையான உடும்புப் பிடிகளில் இருந்தும் ஒருவனைக் காப்பாற்றுகிறது. சத்துவகுணம் தலையெடுக்கும் போது, தமோ குணத்தின் இயல்புகளாகிய காமம், குரோதம் போன்ற கீழான இயல்புகளிலிருந்து நாம் காப்பாற்றப்படுகிறோம். சத்துவ குணத்தை ஒருவன் சரணடையும் போது, உலக ஆசைகளாகிய பந்தங்களிலிருந்தும் மாயையிலிருந்தும் அது அவனை விடுவித்து விடுகிறது. அப்படி அவனை விடுவித்துக் கரையேற்றும் வலிமை சத்துவ குணத்திற்குத் தான் உண்டு.

> சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களைப் பற்றி பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதை. சுவாமி ஸ்ரீராமகிருஷ்ணரின் 152 ஆவது ஜயந்தி தினம் நாளை கொண்டாடப் படுவதை யொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

ஆனால், சத்துவகுணமும் ஒரு திருடன்தான். அதுவே நம்மைக் கடவுளிடம் அழைத்துச் செல்லாது. ஆனால் இறைவனை அடையும் வழியை அது காட்டுகிறது. பரமபதத்திற்குச் செல்லும் வழி வரையிலும் அது ஒருவனை அழைத்து வந்து, ''அதோ பார்! உன் வீடு அங்கே இருக்கிறது'' என்று சொல்லி மறைந்து போய் விடும். சத்துவகுணம் உயர்ந்ததுதான்; என்றாலும் அதனால் பரமபதத்தின் அருகில் செல்லமுடியாது. சத்துவகுணத்தையும் விட உயர்ந்ததும் அழியாததுமான மிகப் பெரிய நிலை ஒன்று இருக்கிறது. அதுவே அனுபூதியில் இறைவனை உணர்ந்து, இறைவனின் மயமாகவே ஆகிவிட்ட ஞானியின் நிலையாகும்.

''இஷ்டாபூர்த்தம் போன்ற நல்ல செயல்களையும் ஒருவன் கடந்து செல்ல வேண்டும் அவற்றையே முடிவாகவும் உயர்ந்தனவாகவும் கருதலாகாது. அப்படிக் கருதுபவன் மிகப் பெரிய மூடன்'' என்ற கருத்துக்களை உபநிஷதங்கள் கூறுகின்றன. காரணம் பற்று இல்லாத முறையில் உலக நன்மைக்காகச் செய்யப்படும் நிஷ்காம கர்மம், தயை, நேர்மை, பக்தி போன்ற அரிய குணங்களைச் சத்துவ குணம் ஒருவனிடம் தோற்றுவிக்கிறது.

மேலும் சத்துவ குணம், ஒரு படிக்கட்டின் கடைசிப் படியைப் போல இருக்கிறது அதை அடுத்து இருப்பது. மாடியாகிய பரப்பிரம்மமேயாகும். பரப்பிரம்மம் தான் மனிதனின் உண்மையான சுய இருப்பிடமாகும். முக்குணங்களையுமே ஒருவன் கடந்து சென்றால்தான் பிரம்ம ஞானத்தை அடைய முடியும் ஏனெனில், சச்சிதானந்தமாகிய உண்மைச் சொரூபம் முக்குணங்களிலிருந்தும் வேறுபட்டதாகவே இருந்து கொண்டிருக்கிறது. பிரம்மஞானம் எங்கே இருக்கின்றதோ அங்கிருந்து சத்துவ குணம் வெகு தூரத்தில் தான் இருக்க முடியும்.

அனுபூதியில் பிரம்மத்தை உணர்ந்து, பிரம்ம மயமாகவே ஆகிவிட்ட நிலை ஒன்றே ஒப்புயர்வில்லாத உயர்ந்த இறுதிநிலை. அதற்கும் ஒரு மாற்றுக் குறையாத நிலையை மனிதன் அடைய வேண்டும் என்பதற்காக, சத்துவகுணத்தையும் கடந்து செல்லும் படி பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

'நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுன, அர்ஜுனா, நீ மூன்று குணங்களையும் கடந்தவனாக ஆகிவிடு'' என்று கீதையில் (2. 45) கண்ணன் சொன்ன கருத்து, இதுதான். ★

சுவாமி
-கமலாத்மானந்தர்

# சுற்றமொடு மன்னனும் விரும்பிப் பணிந்து வரவேற்ற மணிமேகலை

கனகசபாபதி நாகேஸ்வரன்

சிறப்புக் கட்டுரை

சிலப்பதிகாரத்தைப் போலவே, மணிமேகலையிலும் கதைத் தலைவனிடவும் கதைத் தலைவிக்கே சிறப்புமிகுதி. மணிமேகலை அரசனுடைய கடமையை நாட்டின் நல்லாட்சியில் அவனுக்குரிய பொறுப்பை வற்புறுத்துகிறது.

'கோல்நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும் கோள்நிலை திரிந்திடின் மாரிவறம் கூரும் மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிரென்னும் தகுதியின்றாகும், (துயிலெழுப்பிய காதை) என்று அரசனின் 'செங்கோல்' பொறுப்பு உணர்த்தப்படுகிறது

### அரசியற் காப்பியம்

மணிமேகலையின் துறவியலே அடிப்படைக் கதையாகக் கொண்டுள்ள இக்காப்பியத்தில் பல மன்னர்களின் கதைகளும் சொல்லப்படுகின்றன.

ஆபுத்திரன், நல்வினைப் பயனால் புண்ணியராசன் என்ற அரசனுதல் நெடுமுடிக்கிள்ளி என்ற சோழ அரசன் பீலிவலையை மணந்ததைக் கதை, மணிமேகலையில் பழம் பிறப்புத் தொடர்பாகச் சொல்லப்படும் அரசர் கதைகள் என்று சாத்தனார் அரசர் பலரைக் குறிப்பிடுகிறார்.

மணிமேகலைக்கு அரச குடும்பத்தோடு ஏற்படும் தொடர்பு கதையில் முக்கிய பங்கு வகிக்கிறது. அரச குடும்பத்தாருக்கு அறிவுரை கூறிய மணிமேகலை காஞ்சிநகருக்குச் செல்லும்பொழுது 'மந்திரச்சுற்றமொடு மன்னனும் விரும்பி' அவளைப் பணிந்து வரவேற்றதைக் காண்கிறோம்.

மணிமேகலை ஒரு சமய நூலாக இருந்தும் துறவறத்தை மையப்பொருளாகக் கொண்டிருந்தும் அது ஒரு காப்பியம் என்ற தன்மைக்கேற்ப, அரசர்களைப்பற்றிய செய்திகளை மிகுந்துக் கூறுகிறது மணிமேகலையின் காப்பியத் தலைவி கணிகையர் குலத்தைச் சேர்ந்தவள் என்ற குறை பழம் பிறப்பில் அவள் அரச குலத்தைச் சேர்ந்தவள் என்பதில் நிறைவடைகிறது. பொதுவாகத் தமிழ்க் காப்பியங்களில் அரசியின் பங்கு மிக அதிகமாகவே விளங்குகிறது. இக்காப்பியங்களை ஒப்பிடும்பொழுது சிலப்பதிகாரத்திலும், பெருங்கதையிலும் அரசியல் கதையோடு இணைந்து சிறப்புறுகிறது. ஒப்பிட்டளவில் மணிமேகலையில் அரசியலின் பங்கு மிகக் குறைவு. சிந்தாமணி பல்வேறு அரசர்களைத் தழுவி அமையும் கதை அமைப்பினைக் கொண்டிருந்தும்கூட, அக்காப்பியத்திலும் அரசியலின் பங்கு குறைவாகவே அமைந்துள்ளது. சூளாமணி ஒன்றே சுருக்கமான கதை அமைப்பிலும் அரசியலுக்கு மிகுந்த இடம் தருகிறது எனலாம் திருவள்ளுவர் கூறும் அரசியற் சிறப்புக்களை விரிவாகப் பேசுவது சூளாமணி ஒன்றேயெனலாம். காப்பியங்களிலே அரசியலின் பங்கை ஒப்பிடும்போது, முதல் ஐந்து காப்பியங்களைச் சிலப்பதிகாரம், பெருங்கதை, சூளாமணி, சிந்தாமணி, மணிமேகலை என்று வரிசைப்படுத்தலாம்.

### மதப்பிரசார காப்பியம்

மணிமேகலை முழுமையான சமயக்காப்பியம் என்று சொல்லத்தக்களவு தனித்தன்மை பெறுகிறது. காப்பியங்களில் சமயம் என்பதான நிலைமாறிச் சமய நூலில் காப்பிய இயல்புகள் என்று காணக்கூடிய அளவு மணிமேகலை ஒரு சமயக் காப்பியமாகவே திகழ்கிறது. பிற காப்பியங்களில் தலைமை மாந்தர் போராட்டங்களில் வென்று, மண முடித்து, நல்லாட்சி நடத்தி வாழ்வு முடிவில் துறவறம் மேற்கொள்ளக் காண்கிறோம். மணிமேகலையோ துறவு மேற்கொண்ட பெண்ணின் கதையாகின்றது. பாத்திரம் பெற்ற மணிமேகலை புத்த தேவனை வழிபடும் பகுதி, புத்த சமய வாழ்த்துப் பாடல் போன்றது மணிமேகலையில் சாதுசக்கரன், அறவண அடிகள் போன்ற புத்தசமயத் துறவிகள் குறிக்கப் பெறுகின்றனர் புத்தர் அருளிய அறங்கள் பலவும் குறைந்துவிட்டன, ஏதோ இயன்றவரை புத்தரின் அறிவுரைகளைச் சொல்லி வருகிறேன் என்கிறார் அறவண அடிகள்.

மணிமேகலை வஞ்சிக்குச் சென்று சமயக் கணக்கர்தம் திறம் கேட்பதிலிருந்து காப்பியம் முழுமையும் சமயம் நோக்கித் திரும்பிவிடுகிறது. அளவைவாதம், சைவவாதம். பிரமவாதம், ஆசிவகவாதம், நிகண்டவாதம், சாங்கியவாதம், வைசேடிகவாதம், பூதவாதம் ஆகிய பல்வேறு சமயக் கணக்கரின் கருத்துக்களையும் மணிமேகலை கேட்கிறாள்.

சாத்தனார் ஒரு சமயத்தினைச் சிறப்பிக்கக் காப்பியம் இயற்றினாலும் பிற சமயங்களைப் பற்றியும் தெளிவாக அறிந்திருக்கிறார்.

### போகமும் தியாகமும்

சாதி சமய வேறுபாடின்றி எல்லாருக்கும் எல்லாரும் ஒவ்வொருவருக்குமாக வாழ்ந்து இன்புற்ற நிலையினை சிலம்பும், மேகலையும் உணர்த்துகின்றன. ஒருமைப் பாட்டுக் கொள்கை இளங்கோ சாத்தனார் காலத்தில் ஒலித்துப் பொலிவுற்றது. சாத்தனார் வணிக மரபைச் சார்ந்தவர்.

மணிமேகலை அருளைப்பற்றிக் கூறுவது சிலம்பு பொருளைப் பற்றிக் கூறுவது. சிலம்பில் போகம்; மேகலையில் தியாகம்; சிலம்பில் பற்று: மேகலையில் விடுதலை விடுதலையாவது துறவு; சிலம்பில் சிற்றின்பம். மேகலையில் பேரின்பம்.

தவநெறித் தத்துவம், முக்கால உணர்வினையும் நல்கும் என்பதற்கு மணிமேகலை தக்க எடுத்துக்காட்டாக இலங்குகின்றாள்.

அளவை வாதி கூறிய தத்துவம், சமயவாதி கூறிய தத்துவம், ஆசீவகன் கூறிய தத்துவம், நிகண்டவாதி கூறிய தத்துவம் சாங்கியவாதி கூறிய தத்துவம், வைசேடிகவாதி கூறிய தத்துவம் ஆகியனவற்றின் விரிவும் விளக்கமும் கொண்டிலங்கும் காப்பியம் மணிமேகலையேயாம். ★

# கடன் கேட்டால் கொலை; இது நடக்கும் என்று யாருக்குச் சாமி தெரியும்?

நீதிமன்றம் வந்த உண்மைச் சம்பவம்

★ வில்வம் பசுபதி ★

கண்டி உயர்நீதிமன்றத்தில் ஜூரர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்தபின் வழக்கு விசாரணை ஆரம்பமாகியது.

குற்றவாளிக் கூண்டில் இருந்த எதிரி வேலுவின் மேல் ஜூரர்கள் பார்வை சென்றது.

நெற்றியில் விபூதி, சந்தனப் பொட்டுடன் காட்சியளித்தான் எதிரி வேலு.

அவன் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. பொலிஸ் விசாரணையில் பல சுவையான தகவல்கள் வெளிப்பட்டன.

பண்டாரவளைத் தேயிலைத் தோட்டத்திற்கு அருகே சிறு பற்றைக் காடு இருந்தது அங்கு விறகு எடுக்கப்போன சிறுமி ஒருத்தி மனித எலும்புக்கூட்டைக்கண்டு பயந்து ஓடிவந்து தாய்க்குச் சொன்னாள். பொலிஸுக்குத் தகவல் எட்டியது அந்த எலும்புக்கூடு யாருடையது? எப்படி மரணம் சம்பவித்தது? என்பது புரியாத நிலையில் விசாரணைகள் மேற்கொண்டு இறுதியில் வேலுவைக் கைது செய்து வழக்குத் தாக்கல் செய்தனர்.

அரச சட்டத்தரணி முன் ஆரம்ப உரை நிகழ்த்தினார்:

ஜூரர் கனவான்களே; எதிரி இறந்தவரிடம் நூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தார். சம்பவம் நிகழ்ந்த அன்று காலை எதிரியிடம் கடனைத் திருப்பித் தரும்படி கேட்டார். இது சம்பந்தமாக இருவருக்கும் வாக்குவாதம் நிகழ்ந்தது அன்று மாலை இறந்தவர் பதுளைக்குப் போவதாக மனைவியிடம் சொல்லி விட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டார். இவரது நடவடிக்கைகளை அவதானித்து வைத்திருந்த எதிரி வழியில் சந்தித்து, மது வாங்கிக் கொடுத்து தந்திரமாகக் காட்டுப்பற்றைக்கு அழைத்துச் சென்று மிருகத்தனமாகக் கொலை செய்துள்ளார். — என்றார்.

இந்த உரையைத் தொடர்ந்து சாட்சிகள் அழைக்கப்பட்டனர்.

முதலாவது சாட்சி இறந்தவரின் மனைவி சரஸ்வதி. அவர் தனது சாட்சியத்தில் கணவர் பதுளைக்குப் போவதற்கு பணம் கேட்டதாகவும், வேலு தரவேண்டிய பணத்தைக் கேட்டு வனிடம் சொன்னதாகவும் கூறினார் வேலு பணம் கொடுக்காததால் பஸ் செலவிற்கு மட்டும் தன்னிடம் பணம் பெற்றுக்கொண்டு அன்று மாலை பதுளைக்குப் புறப்பட்டதாகக் கூறினார். நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்ட இரத்தக் கறை படிந்த சேட்டைக் காட்டிய போது, அது தனது கணவன் பதுளைக்குப் போகும் போது அணிந்திருந்த சேட் என்றார்.

எதிரியின் சட்டத்தரணி குறுக்கு விசாரணை செய்த போது தெளிவாகப் பதில் அளித்தார்.

கேள்வி; நீர் சொல்லியிராவிட்டால் உன் கணவன் வேலுவிடம் கடனைக் கேட்டிருக்கமாட்டாரா?

பதில்; கடனைக் கேட்டால் கொலை பண்ணுவானென்று யாருக்குச் சாமி தெரியும்?

கேள்வி; அடுத்த நாள் போது பொலீசுக்கு ஏன் முறையிடவில்லை?

பதில்; அவர் தாய் வீட்டிற்குப் போனால் ஐந்து பத்து நாள் நின்று தான் வருவார்.

அடுத்ததாகச் சாட்சி சொன்ன ஆறுமுகம் இறந்தவருக்கும் எதிரிக்குமிடையில் வாக்குவாதம் அன்று காலை நிகழ்ந்ததாகவும் இருவருக்கும் கொடுக்கல் வாங்கல் தகராறு என்று பின்பு அறிந்ததாகவும் கூறினார்.

அடுத்து அரசாங்க இரசாயனப் பகுப்பாளர் சாட்சியமளித்தார் அவர் தமது சாட்சியத்தில், எலும்புக்கூட்டைத் தான் பரிசோதித்ததாகவும், அது நாற்பது வயது மதிக்கக்கூடிய ஆணின் எலும்புக்கூடு எனவும் தெரிவித்தார்.

அடுத்துச் சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி மண்டை ஓட்டில் வெட்டப்பட்ட பல அடையாளங்கள் இருந்ததாகவும் அந்தக் காயங்கள் கோடரியால் அல்லது கூரான ஆயுதங்களினால் ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

அடுத்துச் சாட்சியம் அளித்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் கோடரியையும், இரத்தக்கறை படிந்திருந்த இறந்தவரின் சேட்டையும் சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு அருகாமையில் கண்டெடுத்ததாகக் கூறினார். சம்பவம் நிகழ்ந்த அன்று தொடக்கம் எதிரி தலைமறைவாகி இருந்தார் என்றும், பின் [illegible] செய்யப்பட்டார் என்றும் கூறினார்.

வழக்கின் முடிவில் சகல சாட்சியங்களையும்

## ஞான சஞ்சீவி

# வெற்றியைத் தரும் யோகம்

அ. குமரகுரு

பதஞ்சலி முனிவரின் சூத்திரங்களில் கூறப்பட்ட யோக மார்க்கத்தை அப்படியே கடைப்பிடிப்பது சாதாரண மனிதர்களுக்கு ஒவ்வாத காரியமாயினும், இயன்ற வரையில் மேலெழுந்த வாரியாகவேனும் அம்முறைகளை அனுஷ்டித்து தியானத்தில் ஈடுபடுதல் ஆத்ம ஈடேற்றத்துக்கு உகந்த சாதனையாகும்.

யோக மார்க்கத்தில் ஒருவர் முன்னேறுவது என்பது அவருடைய விடாமுயற்சியிலும் ஆர்வத்திலும் தான் தங்கியுள்ளது. நீண்டகாலம் இடைவிடாது உண்மையான இறையுணர்வோடும் பயபக்தியுடனும் யோகத்தில் ஈடுபட்டு வருபவர்களுக்கு வெற்றி நிச்சயமானது.

இப்பிறப்பில் யோகத்தில் ஒருவருக்கு உண்மையான ஈடுபாடு ஏற்படுகின்றதென்றால் அதற்கான வித்து அவருடைய முற்பிறப்பிலேயே இடப்பட்டிருக்கும்.

யோக மார்க்கத்தின் பலாபலன்களை ஒரு குறுகிய கால எல்லைக்குள் பெற்றுவிட முடியாது. சமாதி நிலையை எய்துவதற்குரிய முன்னேற்றத்தை அடைவதற்கு பல பிறப்புகளில் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியுமிருக்கலாம்.

யோக தத்துவம் மனித வாழ்வினதும் பிரபஞ்சத்தினதும் மர்மங்களை அறிவதற்கு வழிகோலும் அது ஒரு மறைபொருளாக இருந்து வருவதில் ஆச்சரியமில்லை

யோகம் செய்முறை நுட்பங்களை ஒரு குருவின் மூலமாகவோ அல்லது ஆற்றலான சங்கங்களின் இரகசியமான முறையில் அளிக்கும் பாடங்கள் மூலமாகவோ அறிந்து கொள்வது நல்லது.

இறைவனை அடைவதற்கு உகந்த இம்மார்க்கத்தை இன்றைய விஞ்ஞானத்தைக் கொண்டு நிரூபிக்க இயலாது.

ஆனால் முனிவர்களும், ரிஷிகளும் உணர்ந்து, அனுபவித்து, ஆராய்ந்தறிந்து, வெளிப்படுத்தி விட்டுச் சென்ற பேருண்மைகளை ஆத்மீக உலகம் ஏற்றுப் பரீட்சித்துப் பார்த்துப் பயனடைந்து வருகிறது.

'யஜ்ஞ வல்கிய' என்னும் ஸ்மிருதி ஹிரண்யகர்பாதான் ஆதியில் யோகத்தை உலகுக்கு வெளிப்படுத்தினார் என்று கூறுகிறது வேதங்கள் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவையே ஹிரண்யகர்ப என்று குறிப்பிடுகின்றன.

பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா இவ்வாறு கூறுகின்றார். 'அழிவற்ற இந்த யோக ஞானத்தை நான் ஆதியில் விவஸ்வதனுக்கு வெளிப்படுத்தினேன். அவர் மனுவுக்குத் தெரிவிக்க மனு இச்வாகு

## கடல் கடந்த கடிதம்

### கேட்டில் உறுதி கூட்டும் உடைமை!

தம்பி,

பலவகையாலும் இழப்புகளைச் சந்திக்கும் நம்மவர்கள் சோர்ந்து வீழ்ந்து கிடக்கிறார்கள் இனிஎன்ன? எனக் கேள்விக் குறியோடு உள்ளார்கள். வறுமை வாட்டுகிறது; வயிற்றுப் பசி வதைக்கிறது!

பசி வந்திடப் பத்தும் பறந்திடும்; அதனோடு உரிமைக் குரலும் பறக்கும் எனச் சிலர் பகற்கனவு காண்கிறார்கள்! பாவம்! அவர்கள் ஏமாந்துவிடப் போகிறார்கள்!

நீண்ட வரலாற்றுப் பெருமை கொண்ட சமூகம், தம்பி முன்பும் பலதடவைகள் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தே வந்தது. சீரழிந்த சமுதாயங்களைச் சோரவிடாது - சோரம் போகவிடாது - அறிஞர் கூட்டம் அனுபவ மொழிகள் மூலம் தட்டிக் கொடுத்து வந்ததை, தம்பி, நீ மறந்து விட்டாயா?

ஔவை தந்த கொன்றை வேந்தன் கூறுவது என்ன? 'கேட்டில் உறுதி கூட்டும் உடைமை!' (கேட்டில் - வறுமைத் துன்பம் வந்த காலத்து; உறுதி - மனோதைரியம்; கூட்டும் உடைமை - செல்வம் சேர்க்கும்)

போர், பூகம்பம், பெருவெள்ளம் போன்ற அழிவுகளைச் சந்தித்த பல நாடுகள், தம்பி, மீண்டும் தலையெடுக்கக் காரணமென்ன? மன உறுதி!

உறுதிகொள்! உடல் உருக்குலைந்தாலும், உள்ளம் உறுதிகொண்டு உரிமைக்குரலை ஒலிக்கட்டும்!

அன்புடன்
- சிவா -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நாளும் சிவராத்திரி

மகளின் கன்னிமை
காசின்மை காரணமாய்
நிலையாகி விடக் கூடாதே,
படையினரின்
பலவந்தப் போக்கினிலே
பலியாகி விடக் கூடாதே,
என்று
பெண்களைப் பெற்றெடுக்கையில்
கண்ணீரையும் தந்தெடுத்த
தாய்மார்கள் பலருக்கு
நித்தம் சிவராத்திரி

ஆஸ்தியைக் கரைத்து
அயல் நாடு அனுப்பிய மகன்
அஸ்தியைக் கரைக்க
அங்கிருந்து வருவானோ
என்று
அங்கலாய்க்கும் தந்தைமாருக்கு
நித்தம் சிவராத்திரி.

கொட்டும் மழையிலும்
கொடும் பனியிலும்
செவிடுக்கு நின்று
ஷெல்லடி போடும்
நம் வீர இளைஞர்களுக்கு
நாளும் சிவராத்திரி

கந்தசுக்கவி

## நீத்தார் புகழாரம்

## பெண்ணோயியல் துறை முன்னேற்றத்துக்கு உழைத்த சின்னத்தம்பி

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் ஒப்பு பெற்ற மகப்பேற்று பெண்ணோயியல் பேராசிரியரும் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது மகப்பேற்று பெண்ணோயியல் பேராசிரியருமான வைத்திய கலாநிதி அ. சின்னத்தம்பி அவர்களின் நினைவுதினப் நாளை யாகும்,

மகப்பேற்று, பெண்ணோயியல் ஆகிய மருத்துவத் துறைகளில் தலைசிறந்து விளங்கிய இவர் சிகிச்சைத் திறன், அறுவை வைத்திய ஆற்றல் ஆகியவைற்றால் பாவலனதும் நன்மதிப் விப்பினைச் செய்துள்ளார். தமிழ் மொழியிலே பல மருத்துவ பாடநூல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

அவரின் அக்கறைகள் ஆய்வறிவு பயில்தொழில் என்பவற்றுடன் நின்று விடாது கல்வி, சமூக கலாசார, நடவடிக்கைகளிலும் பரந்திருந்தன. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்கலைக் கழகங்களை அமைக்க வேண்டுமென்ற இயக்கத்தின் முதன்மையான முன்னோடிகளில் இவரும் ஒருவராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மகப்பேற்று பெண்

**பெண்ணோயியல் போரசிரியர் யாழ். பல்கலைக்கழகம்**

பையும் பெற்ற பெருந் தகையாவார்.

பெண்ணோயியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் என்ற வகையில் தனிச் சிறப்பு உடையவராகத் திகழ்ந்து கருப்பைக் கழுத்தில் (cervix) ஏற்படும் புற்று நோய்க்கான தீவிர சத்திர சிகிச்சையை (westheims's hys-terectomy) முதன் முதலாக இலங்கையில் செய்த பெருமையும் இவரைச் சார்ந்தது. புகழ் பெற்ற ஆசிரியராக விளங்கிய இவர் இந்நாட்டில் மகப்பேற்று பெண்ணோயியல் ஆகிய துறைகளின் முன்னேற்றத்துக்காக குறிப்பிடத்தக்க பங்க ளிப்பினைச் செய்துள்ளார் ... பெண்ணோயியல் மருத்துவத் துறைகளில் இவரின் சாதனைகளையும் பங்களிப் புகளையும் கௌரவிக்கு முகமாக பிரித்தானிய மகப்பேற்று பெண்ணோயியல் வேத்தியல் மருத்துவக் கல்லூரி 1958ஆம் ஆண்டு இணையுரிமைப் பரிசினை இவருக்கு வழங்கியது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 1980 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதன் முதலாவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானக் கலாநிதி என்னும் பட்டத்தை வழங்கி இவரைக் கௌரவித்தது. ★

## வரலாற்றுச் சின்னம் வல்வையின் அப்பா

"வ. இ" அப்பாவை இனிமேல் காண முடியாது என்பதை நினைக்கும் பொழுது நெஞ்சம் ஒருகல் புரளுகின்றது.

அவரின் வாழ்க்கை வரலாற்றினுள் வல்வை வரலாற்றின் கடந்த ஒரு நூற்றாண்டு கால நிகழ்வுகளும் நிகழ்ச்சிகளும் தொக்கி நிற்பதை அவதானித்துக் கொள்ளல் வேண்டும்.

பெரியபாய்மரக்கப்பல்கள் சிறியதோணிகள் வரை கடலோடிகள் பலைந்றைக் கட்டியாண்ட வ. இயின் வாழ்க்கை வரலாற்றினுள் வல்வெட்டித்துறையின் பொருளாதார சமூக சமயவரலாற்றின் பல சொல் தெறிக்கைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

வ. இ அப்பாவின் மிகப்பெரிய சாதனை வல்வை அம்மன் கோவிலின் மணியகாரராக ஐம்பது வருடகாலமாகச் ... அம்மன் கோவிலை யாழ்ப்பாணத்தின் முக்கிய கோயில்களில் ஒன்று இற்று அந்த முகாமைத்துவம், தன்னையே கோவிலின் முதற் தொண்டன் என்று கொண்ட கருத்து நிலையின் அடிப்படையில் வார்த்தெடுக்கப்பட்டதாகும். அதனால்தான் அது ஐம்பது வருடகாலம் நீடித்தது.

அப்பாவின் வாழ்க்கை பூரணமான வாழ்க்கை; செழித்துக் கிளைத்துப் படர்ந்து இடர்ந்த

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

வாழ்க்கை. அவரின் மறைவு தோற்றுவித்துள்ள வெற்றிடம் சுலபமாக இட்டு நிரப்பக் கூடிய ஒன்றன்று. அவ்வாறு நிரப்ப முடியாமைதான் அப்பாவின் ஆண்மையின் பலமாகும்.

வ. இ. அவர்கள் இன்று வரலாறு ஆகிவிட்டார். வல்வையின் வரலாற்றினுள் இணைந்து கொண்டுவிட்டது அவர் வரலாறு... அந்த அளவுக்கு அவர் புகழ் அழியாத கீர்த்தி

## சர்ச்சைக்குரிய காட்சிகளை முடிவு செய்வது ரசிகர்களே

### மோகன் சொல்கிறார்

சர்ச்சைக்குரிய காட்சிகளைத் திரைப்படங்களில் அனுமதிக்கலாமா? என்ற கேள்வி இன்று திரையுலகில் அதிகம் அடிபடுகிறது

முத்தக்காட்சி பற்றிப் பிரபல நடிகர்கள் கமல், மோகன் என்ன கூறுகிறார்கள் என்று கேளுங்கள்!

**கமல்**

முத்தக்காட்சி பத்து வருடங்களுக்கு முன்பே 'வன மோகினி' படத்தில் வந்துள்ளது.

முத்தக்காட்சியை அப்படியொன்றும் பெரிதுபடுத்தத் தேவையில்லை எல்லோரும் கொடுப்பது தான்; பல்வலி உள்ளவர்களைத் தவிர

இலக்கிய காலத்திலிருந்தே முத்தம் பற்றிப் படித்துள்ளோம். அதனால் இது தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்றது அல்ல என்று கூறுவது ஒத்துவராதது

ஆழமான காதலை அன்பைக் காட்ட மென்மையான முத்தம் நியாயமானது.

அதற்காக சாரைப் பாம்பும், நாகபாம்பும் சேருவது போல் அசிங்கப்படுத்தி விரசப்படுத்தக் கூடாது.

இவ்வாறு கமல் கூறினார்.

**மோகன்**

எந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணை முத்தமிடுவதை விரும்பாதவனாக இருக்க மாட்டான். நானும் அப்படியே. இதை மறுபவன் வேஷதாரியாகவே இருப்பான்.

என்னைப் பொறுத்த வரையில் திரைப்படங்களில் முத்தக்காட்சிகள் இடம் பெறுவதையிட்டு முடிவு செய்ய வேண்டியவர்கள் ரசிகர்களும், தணிக்கைக் குழுவினருமே

அவர்கள் ஏற்றுக் கொள்ளும்போது நாம் நடித்துத்தானே தீர வேண்டும் இவ்வாறு மோகன் தெரிவித்தார். ★

## நதியா - ரகுமான் காதல் உண்மையா?

### பேட்டியில் மறுப்பு

நடிகர் ரகுமானுக்கும் நதியாவுக்கும் இடையில் காதல் மலர்ந்துள்ளதா? அப்படி ஒன்றும் இல்லை என்று கூறுகிறார் நதியா.

பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் இந்த காதல் சமாச்சையில் —

'என் மீது பொறாமை கொண்ட சிலர் வேறு எதுவும் சொல்ல முடியாததால், நடிகர் ரகுமானோடு என்னை இணைத்துப் பேசுகிறார்கள்

இது கொஞ்சமும் ஆதாரம் இல்லாத செய்தி. அவரும் நானும் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்; ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்

இதைவிட வேறு எந்தத் தொடர்பும் எங்கள் இடையே கிடையாது.

ஒரு பெண்ணுக்கு திருமணம் அவசியமான ஒன்று. அந்த நேரம் வரும்போது எனக்கும் திருமணம் நடக்கும் என்றார். ★

**★ தயாரிப்பு: துரை ★**

சாரத்தை அவர் காரசாரமாக மறுத்தார்.

அவர் இதுபற்றி கூறு

### திரைச் சிரிப்பு

சிநேகிதி:- உன்னைப் பெண் பார்க்க ஒருவர் வந்தாரே, என்ன நடந்தது?

நடிகை:- என்னைக் கண்டதும் அவர் பயந்து ஓடி விட்டார்.

சிநேகிதி:- ஏன்?!

நடிகை:- நான் அப்போது 'மேக்கப்' இல்லாமல் இருந்தேன்

## அம்பிகாவின் போதாத காலம்

தெலுங்கில் அம்பிகா நடித்த சகல படங்களும் தோல்வியடைந்துள்ள



தால் தெலுங்குப் படங்கள் ஏதும் கைவசம் இல்லாதுள்ளார் அம்பிகா. விஜயகாந்துடன் இவர் இணைந்து நடித்த 'தண்டனை', 'சந்தர்ப்பங்கள்', 'தழுவாத கைகள்' தோல்வியைத் தழுவிக் கொண்டன

இதனால் இவருடன் சேர்ந்து நடிப்பதற்கு மறுப்பு தெரிவிக்கின்றார் விஜயகாந்த்.

சிவாஜியுடன் ஜோடியாக நடித்துப் பாராட்டுப் பெற்றாலும், பாரதிராஜா, பாக்கியராஜா படங்களில் அம்பிகா இன்னும் நடிக்கவில்லை

தான் சங்கரைக் காதலித்ததை பகிரங்கமாகக் கூறியவர் அம்பிகா

இதனால் இவருடன் நெருங்கிப் பழக நடிகர்கள் தயங்குகிறார்கள். ★

### புதியபடத் துளிகள்

'சத்யூரதிபம்', 'சிந்துபைரவி' படங்களில் இரு ஜோடிகளுடன் நடித்த சிவகுமார் 'சின்னக்குயில் பாடுது' படத்தில் மூன்று ஜோடிகளுடன் நடித்துள்ளார்.

அம்பிகா, இளவரசி, ஜீவிதா ஜோடிகளாக நடிக்கின்றனர்.

சோ, செந்தில், கோவை சரளா ஆகியோருடன் கௌரவ வேடத்தில் பாக்கியராஜ் நடிக்கும் இப்படத்தை பி. மாதவன் இயக்கியுள்ளார். ★

### நட்சத்திர முகவரி

★ கமலஹாசன்
218, டி, டி. கே. ரோட்,
சென்னை - 18.

★ சத்தியராஜ்
8, வாலஸ் கார்டன்
மூன்றாவது தெரு,
சென்னை - 6

★ அம்பிகா
189, அம்பிகா ராதா
தெரு,
ஜானகி நகர்,
சென்னை - 87

★ நளினி
16 மகாலிங்க செட்டித்
தெரு,
மகாலிங்க புரம்
சென்னை - 34.

### நல்ல பாம்பு

அம்பிகாவும் கார்த்திக்கும் நீண்ட இடைவெளியின் பின் 'நல்ல பாம்பு' படத்தில் இணைந்து நடிக்கிறார்கள்


இப்படத்தின் கதை வசனங்களை எழுதி இயக்குகிறார் இராமநாராயணன். ★

★ ★ ★

டிஸ்கோ சாந்தியின் வீட்டில் அவரையும் அவரையும் சேர்த்து மூன்று நட்சத்திரங்கள் உள்ளனர். இருந்தும் அவரது தாய் இதுவரை படப்பிடிப்பை பார்த்ததே இல்லையாம் ★

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 56



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ..............................

வயது ..............................

விலாசம் ..............................

ஒப்பம் ..............................

**போட்டி விதிகள்**

சொற்சிலம்பப் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்.

**இடமிருந்து வலம்**

1. சாணக்கியம்
5. ஒரு கிரகம்
7. முத்தாலை
9. அனேகம்
10. பழம் மாறி விட்டது
11. பாகம்
13. ஆடை
15. சமயங்களில் ஒன்று
18. இசையின் பிரதான அம்சங்களில் ஒன்று
19. இப்போது நடக்கும் இத்தனை போராட்டமும் இதற்காகத் தான்
21. நாடகத்தில் போடுவது
22. கல்வி கற்று இதனை உச்சக முடியுமா? என்பது சர்ச்சைக்குரியது
23. வெட்கப்படும்

**மேலிருந்து கீழ்**

1. தலைநகர்
2. பூமி
3. தாழ்ப்பாள்
4. சூரியன்
6. பொட்டு
8. எருமை
11. பல கலைகள்
12. திக்கு
14. குறவர்
16. ஆண்டு
17. திறப்பு
20. ... தேசம்
21. புல்லாங்குழல்

**சொற்சிலம்பம் இல. 54 விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. பிறந்தநாள்
4. சடை 5. சுபதினம்
6. சங்கதி 7. சாது
9. பகீரதி 10. தமர்
11. ஆம் 12. சுப
15. ஓடை 16. பூம்புகார்

**மேலிருந்து கீழ்**

1. பிரயோசனம்
2. தளபதி 3. மேடை
4. சம்சாரம் 5. சுபதினம்
8. திதி 9. பரிசம்
11. ஆடை 13. பாபு
14. மோர்

**சொற்சிலம்பம் இல 54 பரிசு பெற்றவர்கள் விபரம்**

1ம் பரிசு: செல்வன் பா. குகநேசன், 62/8, பிள்ளையார் கோவில் ஒழுங்கை நல்லூர்.

2ம் பரிசு: செல்வி. குமுதினி, சந்திரசேகரம், பிராமண ஒழுங்கை, கோப்பாய் வடக்கு

3ம் பரிசு: செல்வி P. சுமதி மே/பா E பொன்னையா, ஏழாலை மேற்கு, சுன்னாகம்

★ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பண காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும் நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

## வெள்ளித் திரை

## இஸ்ரவேலிய மொசாட்டும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி) படையினரின் எண்ணிக்கை 14 ஆயிரத்தில் இருந்து 55 ஆயிரம் ஆக அதிகரித்துள்ளது.

தனது சொந்த மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தவே இலங்கை அரசு தனது படையை அதிகரித்துள்ளது

இலங்கையை வெளிநாட்டு எதிரிகள் வட்டமிடவில்லையே!

இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகள் தங்கள் உதவிகளை அதிகரித்து உள்ளன இது ராஜதந்திர வட்டாரங்களில் கவனத்தை ஈர்த்துள்ளது

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்ற சமயம் மேற்கு நாடுகள் நிதி உதவி செய்ய மறுத்தன. இது முன்னர் இருந்த நிலை இன்று அந்த நிலை இல்லை.

சிவிலியன்கள் மீது குண்டுத் தாக்குதலும் யாழ் குடா நாடு மீதும் பொருளாதார முற்றுகையும் விதிக்கப்பட்ட இந்த நேரத்தில் புதிய உதவிகளை இந்த நாடுகள் வழங்க முன்வந்துள்ளன.

### அமெரிக்க எம்.பியின் விஜயத்தின் விளைவு

அமெரிக்க காங்கிரஸ் எம் பி ஸ்டீபன் சோலாரின் விஜயத்தைத் தொடர்ந்துதான் இலங்கையில் அமெரிக்க அரசியல் ஈடுபாடு அதிகரிக்கத் தொடங்கியது

டிசம்பரில் இணை அமைச்சர்கள் ப சிதம்பரம், நட்வர்சிங் ஆகியோர் இலங்கை சென்றனர்.

தமிழர்களை அடக்குவதற்கான முயற்சியில் இலங்கை அரசு இஸ்ரவேல், பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா ஆகியவற்றை நாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன

இந்தியாவின் முக்கிய பாதுகாப்புப் பிரதேசமான இலங்கைக்குள் இச்சக்திகள் புகுந்துள்ளமை குறித்து இந்திய இணை அமைச்சர்கள் கவலை தெரிவித்தனர்.

### ஜெயவர்த்தனா உதவி கோரினார்

வடபகுதித் தமிழருக்கு ஒரு பாடம் படிப்பிக்க ஜனாதிபதி ஜெயவர்த்தனா 1984 மேயில் வாஷிங்டனிடம் இராணுவ உதவியைக் கேட்டார்.

... உடனே தனது தம்பிக் ... ஜெனரல் வேர்னன் வால்டர்ஸ் என்பவரை கொழும்பு

உணவு ஸ்தாபனத்தின் முன்னாள் தலைவர்.

வால்டர்ஸ் கொழும்பு சென்றார், நிலைமையை ஆராய்ந்தார். அதன் பின்னர் இலங்கை சரித்திரத்தில் சி ஐ ஏ ஸ்தாபனத்தின் 'கிறீன் அரோ' (Green arrow) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அமெரிக்கப் பென்டகன் நிறுவனத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட செயல் பிரிவில் பணிபுரியும் சி ஐ ஏ. அதிகாரிகள், உயர்ந்த 'அமைதிக் கொலை' நிபுணர்கள், மொஸாட்டின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் தலைமையின் கீழ் செயல் புரியத் தொடங்கினர்.

இலங்கை நடவடிக்கைகளை இஸ்ரவேல் கையாள வேண்டும் என்றும் வால்டர்ஸ் சிபார்சு செய்தார்.

முன்னாள் சி. ஐ. ஏ அதிகாரிகள் தயாரித்த மதிப்பீட்டின்படி 'கிறீன் அரோ' திட்டத்துக்கு அமெரிக்க வரியிறுப்பாளரின் மூன்று கோடி டாலர் பணம் இரண்டு ஆண்டுகளில் செலவிடப்பட்டிருக்க வேண்டும்.

'கிறீன் அரோ' திட்டத்துக்கு அமெரிக்கா நிதி கொடுக்கின்றது. அமெரிக்கர்களும் இஸ்ரவேலியர்களும் இத் திட்டத்தில் பணி புரிகின்றனர்.

இத் திட்டத்தின் தளபதி இஸ்ரவேலிய பிரிகேடியர் ஜெனரல் ஏப்ரஹாம் மெரிடர். மொஸாட் ... பிரிவை ஆரம்பித்தவர்களில் ... ஜேக்கப் மெரிடரின் மருமகன் இவர்.

கப்பட்ட முன்னாள் சி. ஐ ஏ. அதிகாரிகளின் அறிக்கையை வெறுமனே தள்ளிவிட முடியாது

இலங்கையில் பணி புரியும் மொஸாட், பிரிட்டிஷ் கொமாண்டோக்கள், 'கிறீன் அரோ' திட்டத்தின் கீழ் தமிழ்ப் பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்பட உள்ள 'அரபு மேற்குக் கரையோரத்தில்' செயல் படுத்தப்பட்ட தந்திரங்கள் ஆகியன பற்றிய விவரங்கள் இந்த அறிக்கையில் உள்ளன

குடிமக்கள் பகுதிகளைத் தாக்கும் திட்டமும் இந்த அறிக்கையில் உள்ளது.

### இஸ்ரவேல் ஜனாதிபதியின் விஜயம்

நவம்பரில் இஸ்ரவேலிய ஜனாதிபதி செயிம் ஹேர்ஸோக் கொழும்பு வந்தார். இது திடீர் விஜயம் என்று கூறப்பட்டது.

ஜெயவர்த்தனாவின் சிவப்புநிற டாக்டியர் காரில் திரு. ஹேர்ஸோக் கொழும்பைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு இருக்கையில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சேபால ஆட்டிகலை மொஸாட் தளபதி ஜெனரல் மெரிடருடன் பூட்டிய கதவுகளின் பின்னால் இரகசியப் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்தார்.

இஸ்ரவேலிய ஜனாதிபதியின் கொழும்பு விஜயத்துக்கான ஏற்பாடுக

சின் உதவிச் செயலாளர் அவ்ரகாம் பிகிமோ, ஐந்து தினங்களுக்கு முன்னரே கொழும்பு சென்றார்.

இஸ்ரவேலிய பதிவாளர்களும் ஐந்து தினங்களுக்கு முன்னரே கொழும்பு சென்றனர்

இவ்வளவு ஏற்பாடுகளுக்குப் பின்னர் இஸ்ரவேல் ஜனாதிபதி ஹேர்ஸோக் கொழும்பு விஜயம் மேற்கொண்டது தற்செயலானதாக இருக்க முடியுமா?

இலங்கை இஸ்ரவேல் உறவு திடமானதாக மாறிவிட்டது.

அரபு மேற்குக் கரைப் பிரதேசத்தில் இஸ்ரவேலியர்கள் முரட்டுத் தாக்குதலை நடத்தினர்.

அப்படியான தாக்குதல் ஒன்று முதலில் யாழ்ப்பாணத்திலும்-

பின்னர் எல்லா மாநிலமான தமிழ்நாட்டிலும் நடத்தப்படுமா?

## கடன் கேட்...

(5ம் பக்கத் தொடர்ச்சி) கட்டிக் காட்டித் தொகுப்புரை நிகழ்த்திய அரச சட்டத்தரணி, நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் குற்றச்சாட்டு நிரூபணமாகின்ற தென்றார் இந்தக் கொலையைச் செய்த காரணத்தினாலேயே எதிரி தலைமறைவாக இருந்தார் என்றார்.

இவ்வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்கள் சான்றுப் பொருள்கள் ஆகியவற்றையும், தொகுப்புரைகளையும் ஆராய்ந்த ஜூரிகள் எதிரி குற்றவாளி என ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர்

## எல்லையற்ற---

(3ம் பக்கத் தொடர்ச்சி) எரி நட்சத்திரங்களும் வால் நட்சத்திரங்களும் இருந்து வருகின்றன. இந்த 9 கோள்களைவிட இன்னும் சில கோள்களும் சூரிய மண்டலத்தில் இருக்கக்கூடும் என வானியலாளர்கள் நம்புகின்றனர். அப்படிக் கண்டுபிடிக்கும் பட்சத்தில் சூரியமண்டலத்தின் பரப்பும் விரிவாக்கப் படக்கூடும். ★

## ஞான சஞ்...

(5ஆம் பக்க தொடர்ச்சி) வுக்குக் கற்பித்தார்'

விவஸ்வதா என்பது சூரியபகவானைக் குறிக்கும் அவர் மனு நீதியை உலகுக்கு அளித்த மனு என்னும் வேதகாலத்துத் தெய்வீக மன்னனுக்கு அருளினார் மனு இந்தியாவின் சூரிய வம்சத்தின் ஆரம்ப நாயகனாகிய இக்ஷவாகுவுக்கு யோகத்தைக் கற்பித்தாரெனக் கதை கூறுகிறது.

இப்படியாக தெய்வீக புருஷர்கள் மூலமும் ரிஷிகள் மூலமும் யோகம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மில்க்வைற் செய்தி -- 135
**விவசாய மலர்**
10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 மில்க்வைற் பார்சோப் அல்லது
2 கப்ப மில்க்வைற் சோப்
மேலுறைகளை அனுப்பி
இதழ் 135 - மில்க்வைற்செய்தி
விவசாய மலரைப்
பெற்றுக்கொள்ளுங்கள்
**மில்க்வைற்-யாழ்ப்பாணம்.**

# சஞ்சீவி

28 - 02- 1987 சனிக்கிழமை

பாடசாலைகளுக்கு பணிவான வேண்டுகோள்
அன்புடையீர்,
எங்கள் மில்க்வைற் செய்தி, வேளாண்மை, மெய்ஞானம், விஞ்ஞானம், கிராம அபிவிருத்தி, காந்தியப் பொருளாதாரம், நல்ல அனுக்குகள், மகளிர் கலைகள். முதலிய பல செய்திகளுடன் மற்றும் வெளியீடுகளும், மாதாந்தம் உங்கள் பாடசாலைகளுக்குப் பயன்தர வேண்டும் என்று நீங்கள் கருதினால், நாங்கள் இலவசமாக அனுப்புவோம். இதற்கு நீங்கள் முன்கூட்டியே தபால் செலவுக்கு ஏதாவது வழிவகுத்து விண்ணப்பித்துக்கொள்ளுங்கள்.
**மில்க்வைற் - யாழ்ப்பாணம்,**




# பொருளாதாரத் தடை
## ஐ. நா. தீர்மானத்திற்கு முரணானது
### உலக நீதிமன்றில் நீதி கோரவேண்டும்

1948 டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐ. நா. பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க, ஒவ்வொரு பிரஜையும் சமய, சமூக, பொருளாதார சுதந்திரமுள்ளவராக வாழ அனுமதிக்கப்பட வேண்டும்.

இச்சுதந்திரம் எந்நாட்டிலிருக்கும் எவருக்கும் உரித்தானது.

இந்தத் தீர்மானத்தின் 22 ஆம் ஷரத்து தொடக்கம் 26 ஆம் ஷரத்து வரைக்கும் உள்ளவை பொருளாதார சமூக உரிமைகளை வற்புறுத்துகின்றன.

சகல நாடுகளும் இப்பிரேரணைக்கு வாக்களித்து இப்பிரேரணை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

பேராசிரியர் லத்தர் பார்ச் என்பவரின் கூற்றுப்படி, சர்வதேச அமைப்பினால் கொண்டு வரப்பட்ட இத்தீர்மானப்படி, இதனை ஏற்றுக்கொண்ட நாடுகள் அத்தனையும் இதை அமுல்படுத்த வேண்டும்.

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, சர்வதேசச்சட்டம் மக்கள் மீதும், அரசாங்கத்தின் மீதும் உரிமைகளையும் கடமைகளையும் விதித்திருக்கிறது.

இலங்கை ஐ. நா. சபையில் ஓர் அங்கத்துவ நாடு. ஆகவே, இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் பொருளாதார உரிமைகளைத் தடுக்கமுடியாது. பொது மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய பாரிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதாகின்றது.

இலங்கை அரசு வட பகுதி மீது பொருளாதாரத்தடை விதிப்பது ஐ. நா. தீர்மானத்திற்கு முரணானதாகும்.

இப்படியான தடைகளை எதிர்த்து இலங்கை மேன்முறையீட்டு மன்றத்திலோ அல்லது சில உலக நீதிமன்றத்திலோ வழக்குத் தொடர வேண்டும்.

சட்டப் பேரறிஞர்கள் பலர் தமிழ் கூறும் நல்லுலகத்தில் உளர். அவர்கள் அணிவகுத்திரண்டு தமிழ் மக்கள் மீது அரசாங்கம் இழைக்கும் கொடுமைகளை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்.

தென் இலங்கையில் ஒருவகையான பொருளாதார நிர்வாகமும், வட இலங்கையில் இன்னொரு வகையான பொருளாதார நிர்வாகமும் இருக்கக் கூடாது.

பிரிவினைக்குப் போராடும் அபரிமிதமான மக்களுக்கு எதிராக இங்கிலாந்து ஒரு காலமும் பொருளாதாரத் தடை விதிக்கவில்லை. ஒரு தேசம் என்று கூறும் அரசு இருவிதமான பொருளாதாரத்தை அமுல்படுத்துவது எந்த நாட்டிலும் நடைபெறாத ஒரு செயலாகும்.

நீதியின் அடிப்படையில், அரச நியதியின் அடிப்படையில் இது ஓர் அநியாயமான செயல். இதைச் சட்ட அறிஞர்கள் பல வழியாலும் நீக்க முயலவேண்டும்.

## யாழ் இந்து-கொக்குவில் இந்து நேற்று மோதல் இல்லை

யாழ்ப்பாணம், பெப் 28
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி அணிக்கும் இடையே நடைபெற இருந்த கிரிக்கெட் போட்டி தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறவில்லை இந்த போட்டி இன்று பிற்பகல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். (இ-7)

## ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிதி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 28
நல்லூர் லியோ கழகத்தால் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை நிதிக்காக 'லியோ அரங்கம் 87' என்ற பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பிரபல கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், நேர்த் ஸ்டார் இசைக் குழுவின் இசைத் தென்றலும் இடம் பெறவுள்ளன. (இ)

## சென் ஜோன்ஸ் 220 ஓட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப். 28
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிராக துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்றைய ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 7 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது.

சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்த ஆட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெறும். (இ-எ)

## சென்றல் பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், பெப். 28
நேற்றையதினம் நடைபெற்ற யாழ் மத்திய கல்லூரி அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் சென் பற்றிக்ஸ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 2 விக்கெட்டுக்களை இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றிருந்தது இந்த ஆட்டம் தொடர்ந்து நடைபெறும். (இ-7)

## 3 சிங்கள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஒதுங்கினர்.

அன்றில் இருந்து இம் மீனவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பில் இருந்து வருகின்றனர்.

மூன்று மீனவர்களின் பெயர்கள் வருமாறு:-
1. ஏ. பி. லீலசேன,
2. எம். எஸ். மெண்டிஸ்,
3. ஆர். ரி. அத்துசிறி
(இ-எ)

## இரட்டி...

(1ம்பக்க தொடர்ச்சி)
அளிப்போம். எமது தேவையை நாமே நிறைவேற்றுவோம். நமது பிரதேச வளத்தை நாமே பெருக்குவோம். எமது சொந்தக்காலில் நிற்க முயல்வோம். சுதேசியத்தை ஆதரிப்போம். இது ஒவ்வொரு தமிழ் மகனதும் அடிப்படைக் கொள்கையாக வேண்டும்.

## சர்வதேச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அமைதி காணும் பிரிவின் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தக் கூடியதான ஐ. நா. அவதானிகள் குழு ஒன்று இலங்கைக்குச் செல்ல அந்நாட்டு அரசு அனுமதிக்க வேண்டும்.

இக் குழுவில் இடம் பெறும் தகுதியான, பாரபட்சமற்ற இராணுவ அதிகாரிகள் அமைதித் தீர்வு காண உதவுவர்.

சைப்பிரஸில் ஐ. நா. பெற்ற அனுபவத்தை கவனமாக பரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

### காமன்வெல்த்

காமன்வெல்த் அமைப்பில் இலங்கை தீவிர பங்கெடுத்துவருகின்றது. அமைப்பின் உறுப்பு நாடு ஒன்று கோரிக்கை விட்டால் சர்வதேச, பிராந்திய மனித உரிமை அமைப்பின் கீழ் உதவி பெறமுடியும்.

### செஞ்சிலுவைச் சங்கம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இரண்டு கொள்கைகளில் ஒன்று இராணுவ மோதலில் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பது மற்றது இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது.

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தை வெளியேற்றியதனால் தனது பிரசைகள் உயிருக்குப் பாதுகாப்பு நிவாரணம் பெறுவதை இலங்கை அரசு மறுத்துவிட்டது.

இனப் பிரச்சினையில் பாதுகாப்பு ஆலோசகர், ஆயுத விற்பனையாளர் எல்லாம் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவை எல்லாம் சட்டபூர்வமானவை என்றும் நாட்டின் இறைமைக்கு பயமுறுத்தல் கொடுக்காத தாதிகளையும் வெளிநாட்டு வைத்திய அதிகாரிகளையும் ஏன் அனுமதிக்கக் கூடாது.

இப்படி அந்த அறிக்கையில் சர்வதேசச் சமாதான ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுள்ளது. (அ-எ)

## இன்று--

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கள் தங்களது பெயர், பிறந்த திகதி, படிக்கும் வகுப்பு, பாடசாலை அதிபரின் அத்தாட்சிக் கடிதம் என்பனவற்றை பஸ் நிலையத்தில் சமர்ப்பித்து சீசன் ரிக்கெட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என கோண்டாவில் டிப்போ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தினமும் காலை 9 30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை சீசன் ரிக்கெட் யாழ் பஸ் நிலையத்தில் வழங்கப்படும். (இ-10)

## சித்தன்கேணியில் இன்று சிறைப் பறவைகள்

சஞ்சீவி வார இதழில் வெளியான 'சிறைப் பறவைகள்' குறுநாவல் அறிமுகவிழா இன்று பிற்பகல் 3 மணியளவில் சித்தன்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பிரபல எழுத்தாளரான திரு. து வைத்தியலிங்கம் இக்குறுநாவலை எழுதினார்.

தலைமையக உதவிஅரச அதிபர் திரு கி கோபாலரட்ணம் தலைமை வகிப்பார்.

சங்கானை உதவி அரச அதிபர் அலுவலக உத்தியோகத்தர்கள் இதனை ஒழுங்கு செய்துள்ளனர். (இ-எ)

## அங்குரார்ப்பண விழா

யாழ்ப்பாணம், பெப். 28
பனை அபிவிருத்திச் சபையின் பனை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்குரார்ப்பண விழா இன்று காலை 9.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெறுகிறது.

விழாவுக்கு வடமராட்சி வடக்கு - கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமை வகிப்பார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா, மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

இதேபோல் வடமராட்சி தெற்கு - மேற்கு உதவி அதிபர் பிரிவில் அல்வாய் தெற்கு சின்னத்தம்பி மகாவித்தியாலயத்திலும் அங்குரார்ப்பண விழா நடைபெறும்.

இவ்விழாவுக்கு உதவி அரசாங்க அதிபர் திரு இ ஐயாத்துரை தலைமை வகிப்பார். (இ-10)

## "வலை" அறிமுக ஆய்வு அரங்கு

யாழ்ப்பாணம். பெப் 28
டானியல் அன்ரனியின் 'வலை' சிறுகதைத் தொகுதி அறிமுக ஆய்வு அரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

கவிஞர் இ. முருகையன் தலைமை வகிப்பார். திரு. நந்தினி சேவியர் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

கலாநிதி அ. சண்முகதாஸ் சிறப்புரை நிகழ்த்துவார். (இ-எ)

## தாக்குதல்

முழங்காவில், பெப். 28
வியாழன் அதிகாலை ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளப் பகுதியில் ஹெலியிலிருந்து சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. தாக்குதலினால் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

## பனைத்---

(7ம் பக்கத் தொடர்ச்சி)
டிச் செல்வதற்கு கீழ் மூன்று சில்லுகளும் பொருத்தப்பட்டிருக்கும்.

எரிபொருள் கொண்டோ, மின்சாரம் கொண்டோ, காற்றின் அழுத்தம் கொண்டோ இதனை இயக்க முடியும்.

இப்படியான இயந்திரத்தை அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபா வரை தேவைப்படலாம் எனினும் ஆய்வு நிறுவனத்தினரால் மொடலாக அமைக்கப்பட்ட இயந்திரத்துக்கு ஏழாயிரம் ரூபா முடிவதாக தெரிகிறது.

தகுந்த முறையில் இந்த இயந்திரத்தை உருவாக்கிப் பனந் தொழிலை வளப்படுத்த ஆய்வு நிறுவனத்தினர்க்கு பொதுஸ்தாபனங்கள் கைகொடுத்து உதவ வேண்டும்.

எதிர்கால இளைஞர்கள் வேலை தேடி வெளிநாட்டுக்கு ஓடுவதை நிறுத்தி வெளிநாட்டவர்கள் வியக்கும் வண்ணம் எமது வளங்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

இயந்திரம் மட்டுமல்ல ஆய்வு நிறுவனத்தினர் மரம் ஏறி இறங்கும் இயந்திரம் தயாரிப்பதுடன் மட்டும் நின்றுவிடவில்லை.

மரத்தில் இருக்கும் பாளையைப் பதப்படுத்தி அதனை அங்கிருந்தே இயந்திர மூலமாக சீவி பணங்களைப் புனல் மூலமாக தரையில் உள்ள பாத்திரம் ஒன்றில் வந்து விழும்படி பொறியியல் இயந்திரம் ஒன்றையும் அமைத்துள்ளனர்.

இதன் மூலம் சிறுவர்களும் பெண்களும் முதியோரும் இத் தொழிலை சிரமமின்றிச் செய்ய முடியும் என அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

அவர்கள் திறமையைப் போற்ற வேண்டும் போற்றுவதுடன் மட்டும் நின்று விடாமல் பொதுஸ்தாபனங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களின் தேவையை அறிந்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும். *

## தபாலக---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
குச் சென்றனர்.

தந்தாவேலைகளை எடுத்தவன் பின் மரணமானவரும், காயமடைந்தவரும் மலசலகூடப் பக்கமாகச் சென்றனர்.

அவர்கள் ஏதோ ஒரு பொருளில் மிதித்த போது பாரிய சத்தத்துடன் அது வெடித்தது.

இதன் காரணமாக ஐயாத்துரை சிவகுமார் (23 வயது) என்ற ஊழியர் கை, கால் சிதறிய நிலையில் மரணமானார்.

இவர் நாயன்மார்க்கட்டைச் சேர்ந்தவர்.

எம். ஆதித்தன் (20 வயது) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்தவர். (இ-10)

## வீட்டுத்...

(7ஆம் பக்க தொடர்ச்சி)
பொருள் சுரட்டலின் உண்டு.

போதியளவு இலைக்கறி உண்பவர்களின் கண்கள் பளபளப்பாகவும், பார்வை கூர்மையாகவும் இருக்கும். வரண்ட இலங்கையில் மண்டூர் கீரையும், வடஇலங்கையில் சண்டைக்கலார தந்த செங்கீரையும் சாமலை வர்ணக் கீரையும் உண்டு. ஆகவே வரண்ட மாநிலங்களில் வாழும் மக்கள் தத்தம் வீட்டுத் தோட்டத்தில் கீரை சாகுபடி செய்து சுகத்தைப் பேணலாம்.

வீட்டுத் தோட்டத்தில் கீரை விதைக்க விரும்புவோர்க்கு விதை பெறுவது ஒரு பிரச்சினையாயிருக்கும் விவசாய விரிவாக்க நிலையங்களில் அல்லது அண்டையில் உள்ள கமக்காரப் பெருங்குடி மக்களிடமிருந்து கீரைவிதை கொள்வனவு செய்யலாம்.

நன்றி; மில்க்வைற் விவசாயப்பகுதிக்கு.

## மகன்தலை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பிடிக்கப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அன்று முதல் தாயார் சித்த சுவாதீனமற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5)

## ஆசிரியர்---

(7ம் பக்கத் தொடர்ச்சி)
செய்துள்ளது.

இவர்களது பதவிநிலை மாறுபடாமல் வேறு பாடசாலைகளுக்கிடையே இடமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். இதனால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் கல்வி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

### பரீட்சைகள்

க. பொ. த உயர்தரம், க. பொ. த. சாதாரணதரம் உட்பட பல்வேறு பரீட்சைகளுக்கும் இணைப்பதிகாரிகள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், கடமைகளுக்குத் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களை ஒரு சீரான திட்ட அடிப்படையில் மாற்றிய மைத்து எல்லோருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

இப்பதவிகளுக்கு இதுவரை காலமும் எந்த நடைமுறைத் திட்டமும் பயன்படுத்தப்படாமல் வட்டாரக் கல்வி அதிகாரிகளின் விருப்பத்திற்குரியவர்களும் கல்வித் திணைக்களத்தில் கடமை புரிபவர்களின் சிபார்சுகளுக்கு உள்ளாகின்றவர்களும் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டும். *

வட பிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்க உறுப்பினர்களின்
**கவனத்திற்கு**
இதுவரை இலக்கம் 229 மணிக்கூட்டு வீதி ஞானம்ஸ் ஹோட்டலில் இயங்கி வந்த எமது சங்கக் காரியாலயம் 1-3-87 (ஞாயிறு) முதல் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 37/2 இலக்கத்திற்கு (மஸ்கன்ஸ் லிமிட்டெட் கட்டிடத்திற்கு அருகில்) மாற்றப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். -நன்றி-
இப்படிக்கு
செயலாளர்
வட பிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கம்.




## ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வன் சுப்பையா உதயபாதம்**
(வசந்தன்)
திதி: 1-03-1987 ஞாயிறு
தாயின்மடியில் 23-03-1969 — தாயகத்தின் மண்ணில் 12-03-1986

இதயத்தில் ஓர் கனி இளையவனே நீயென்று பெற்றவளும் மூத்தோரும் பெருமையுடன் நாம் மகிழ்ந்திருக்க தாயகத்தின் தலைவனும் தாசனைத் தேடி முன்சென்ற ஊர்வலத்தில் முத்திரைச்சந்தியிலே முடிந்ததுவோ உன்விதி. உத்தமரே உதயபாதா ஓராண்டு சென்றதையா உள்ளம் துடிக்கிறது உமது இலட்சியங்கள் என்றும் எம் நெஞ்சில் நிலைத்திடுமே.

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.
இங்ஙனம் திருமதி சுப்பையா குடும்பத்தினர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 28 - 02 - 1987 தொலைபேசி இல. 24805 23078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org